1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
*Telegrams:*
"CATHOLIC PRESS"
JAFFNA.

*Telephone:*
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 30-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு ஆவணி மாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## ஓ குருத்துவமே! உன்மகிமை சதாகாலமும் இலங்குவதாக!

ஆசிரியர் A. M. குலாஸ், வங்காலை.

புதிய ஏற்பாட்டிலே திவ்விய பூசைப்பலியைச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்க—தேவ திரவியஅனுமானங்களை நிறைவேற்றிவைக்க—தேவவாக்கை மனுஷருக்கு அறிவிக்கச் சருவேசுரனாலே தெரிந்துகொள்ளப்படுகிறவர்கள் குருப்பிரசாதிகளே. "ஏனெனில், எவன் ஒருவனும் தானாக இந்த மகிமையான அந்தஸ்தை எடுத்துக்கொள்ள முடியாது." (எபி. 5; 4) ஆகவே, சத்தியதிருச்சபையில் சகல மனுஷர்களுள்ளும் சிலர் விசேஷவிதமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டுச் சருவேசுரனுக்கும் மனுஷருக்கும் இடையில்நின்று கைங்கிரியம்பண்ணும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (எபி. 5 1);

குருத்துவம் ஓர் தேவதிரவிய அனுமானமாய் இருந்தாலும் அதில் ஏழுவரிசைப் பட்டங்கள் உண்டு. முந்திய ஆறு பட்டங்களும் கடைசிப்பட்டமாகிய குருப்பட்டத்திற்கு ஏறிச்செல்லும் ஏணிப்படிகள் போலும், குருப்பட்டம்பெற்றோர்க் குதவி புரியத் தத்துவங்கொடுக்கும் அதிகாரபட்டங்கள் போலும் உள்ளன. அப்பட்டங்களுள் முதல்நான்கு பட்டங்களும் 1 "ஒஸ்தியாறியு", 2 "லெக்தோர்", 3 "எக்சோர்சிஸ்தா", 4 "அக்கொலித்து" என்றும். ஏனைய மூன்று பெரியபட்டங்களும் 5 "சுப்தியாக்கோனு", 6 "தியாக்கோனு", 7 "குருத்துவம்" என்றும் அழைக்கப்படும். இத்தகைய மகத்தான பரிசுத்தபட்டங்களைப் பெறுகிறவரின் மகிமையை வருணிக்க முடியாது. குருப்பிரசாதிகள் அடையும் வல்லமையானது மனுஷபுத்திக்கும், அறிவுக்கும் மேற்பட்டனவென்று திரிதேந்து சங்கத்தின் முடிபோடு சகல வேதசாஸ்திரிகளும் ஒருப்படச் சொல்லுகிறார்கள்.

ஓ! குருத்துவமே! வானுலகும் பூவுலகும் தொழுதேத்தும் உயர்பீடமே! சம்மனசுகளுக் கெட்டாத பரமபொக்ஷமே! பரலோகத்தில் சதாசம்மனசுகள் ஆண்டவரின் சந்நிதானத்தில் பரிசுத்தர் பரிசுத்தர்என்று மங்களகீதங்கள்பாடிப் புகழுவதேயல்லாமல், உன்னதபரம தேவனைத் தங்களுடன் ஒன்றிக்கமுடியாமல் தவிக்கின்றார்கள். ஆனால், மானிடசென்மம் எடுத்துக் குருத்துவஅந்தஸ்துக்கு அழைக்கப்பெற்ற ஓர் குருவானவர் பெரியவியாழக்கிழமை யேசுநாதர் தேவநற்கருணையை ஏற்படுத்தியதுபோல் அவரது அதிகாரஉரிமைபூண்டு நடுப்பூசைவேளை கோதுமைஅப்பத்தையும், முந்திரிகைஇரசத்தையும் எடுத்து வானத்தை அண்ணார்ந்து "இதுஎன்சரீரம், இது என் இரத்தம்"என்று வாய் திறந்து உச்சரிக்கவே, என்ன அதிசயம்! என்ன புதுமை! என்ன ஆச்சரியம்! உடனே தேவன் பரலோகத்திலிருந்து பூலோகமட்டாகத் தம்மைத் தாழ்த்தி ஓர்நீச மானிடஉருவம் எடுத்த குருவின்சொற்களுக்கு அடிபணிந்தாற்போல் பீடத்தின்மீதே எழுந்தருளிவருகிறார்.

ஆன்ம இரட்சணியத்தின் பொருட்டுத்தமக்குமாதாவாகும்படி ஞானச்சிப்பியாகத்தேவன் தெரிந்துகொண்ட பரிசுத்த கன்னிமரியாயைப் பரலோக பூலோகஇராசேஸ்வரியாக உந்நதபீடமட்டும் உயர்த்தினாலும் திவ்விய பூசைப்பலியை நிறைவேற்றும்பாக்கியம் அவருக்குக் கொடுபடவில்லை. பரிசுத்தவியாகுலத்தாயார் கல்வாரிமலையிலே பெரியவெள்ளிக்கிழமை தமது திருக்குமாரனோடு சிலுவைப்பலியை ஒருமுறைமாத்திரம் ஒப்புக்கொடுத்தார். ஆனால், குருவானவரோ சிலுவைப்பலியை மாத்திரமல்ல, பூசைப்பலியையும் சிலுவைப்பலியையும்ஒன்றுசேர்த்து ஒருமுறையல்ல, பலமுறை தமது சீவியகாலத்தில் ஒப்புக்கொடுக்கும் பாக்கியத்தைப்பெறுகிறார்.

அன்றொருநாள் யேசுபிரான் தமது பிரியசீஷர்களைப்பார்த்து "யார் யாருடையபாவங்களைமன்னிப்பீர்களோ அவைகள் மன்னிக்கப்படும்" என்றும் "யார் யாருடைய பாவங்களைமன்னியாதிருப்பீர்களோ அவைகள் மன்னிக்கப்படா"வென்றும், "பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்குச் சர்வ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற"தென்றும்கூறிய திருவாக்குகளை நினைவுகூர்ந்து ஓர் குருவானவருக்கும் இவ்வித சர்வஅதிகாரத்தைச் சத்தியதிருச்சபை கொடுத்துவருகின்றது. ஆனபடியால் ஓர்குருவானவர் எவ்விதபாவியாய் இருந்தாலும் மனிதருடையபாவங்களை மன்னிக்கவும், அவர்களின் ஆன்மாவை நரகினின்று இரட்சிக்கவும் கூடியவராகிறார்.

ஒரே இடத்தில் ஓர் சம்மனசானவரையும் ஓர் குருவானவரையும் சந்திப்பேனாகில், முதன்முதல் எனது வணக்கத்தைக் குருவானவருக்கும், பின்னரே சம்மனசானவருக்கும் செலுத்துவேன் என்று ஓர் அர்ச்சியசிஷ்டர் கூறியிருக்கின்றார். ஏனெனில், குருவானவர் பரலோகத்திற்கும் பூலோகத்திற்குமிடையிலுள்ள ஒருபரம மத்தியஸ்தரைப்போல தேவனிடம் பலிவேளையிலே உலகோருக்காகப் பரிந்துமன்றாடி அவர்களின் பாவ அகோரத்தைத் தணிக்கவும், அவர்களுக்குஇகபரநன்மைகளை அளிக்கவும், உத்தரிக்கும்ஆன்மாக்களை ஈடேற்றவும் துணைபுரிகிறார்.

"அபிஷேகிக்கப்பட்டவர்களைத்தொடாதே" என்பது பழையஏற்பாட்டில் தேவன் கொடுத்தவாக்கு. அன்னவர்கள் மானிடரூபம் எடுத்த ஓர் தெய்வீகமனுஷர். ஆகையினால் குருத்துவாபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் மானிடரினின்றும் மேலாக உயர்த்தப்பட்டவர்கள். அவர்களின்மகிமை இகத்திலும் பரத்திலும் மேலானதாகவே காணப்படும். ஆன்மவாஞ்சையே அவர்களின் கவலை. இரட்சணியவேலையே அவர்களின் ஓயாஅலுவல். சருவேசுரனைப் புகழ்ந்துசெபிப்பதே அவர்களின் பொழுதுபோக்கு.

உலகில் ஓர்சிநேகிதன் தன் உற்றநண்பனுக்குச் சிலகாரியங்களைச்சொல்ல மறுக்கக்கூடும். அன்புள்ளமனைவி தன் கணவனுக்கு உள்ளதைச்சொல்லப் பயப்படக்கூடும். ஆனால், குரு

### ஐந்துகோடி கத்தோலிக்கர்

கம்யூனிஸ்த ஆட்சியின் கீழுள்ள நாடுகளிலே தற்போது ஐந்துகோடி கத்தோலிக்கருக்கு மேல் இருப்பதாகவும், பதினோராயிரம்குருமார் வேதகலாபனைக்குப்பலியாய் இருந்துவருவதாகவும் வத்திக்கானின் அதிகம்பிந்திய புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. ஐரோப்பாவிலே கம்யூனிஸ்த ஆதிக்கத்தில் இருந்துவரும் நாடுகளிலுள்ள 130 மேற்றிராசனங்களிலே 64 மேற்றிராசனங்கள் மேற்றிராணிமாரின்றி இருக்கின்றன. சீனாவிலுள்ள 146 மேற்றிராசனங்களிலே இருபத்தொன்றும், கோறியாவிலுள்ள எட்டினுள் நான்கும் மேற்றிராணிமாரின்றி இருந்துவருகின்றன. ரூஷியா, லிதுவானியா, ரூமேனியா, வடகோறியா என்னும் நான்குநாடுகளிலும் மேற்றிராணிமார்கள் சிறையில் இடப்பட்டும், நாடுகடத்தப்பட்டுமுள்ளார்கள். சிறையிலே சிலர் மரணமடைந்துவிட்டார்கள்.

---

வானவர் பாவசங்கீர்த்தனத் தொட்டியிலிருக்கும்போது, எவ்விதபஞ்சமாபாதகனும் மனஸ்தாபம்பெருக அவரிடஞ்சென்று தனதுபாவங்களை ஆழமான மனத்தாழ்மையுடன் அறிக்கையிடுகிறான். தன்னால்சுமக்கமுடியாத பெரும்பாரச்சுமைபோல் இருந்த பாவச்சுமையை இறக்கிவிடுகிறான். ஆன்மசாந்தியடைகிறான். என்னே! அவன் கண்டுகொள்ளும் இருதயசமாதானம்.

உலகில் எத்தனையோஉயர்ந்த அந்தஸ்துக்கள் இருப்பினும் அவைகளெல்லாம் இவ்வுலகோடேயே அழிந்தொழிந்துவிடும். ஆனால், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையென்ற மூவித ஆசைகளையும்வெறுத்துத் துறவறம்பூண்டுள்ள குருப்பிரசாதிகளின் அந்தஸ்தோ எவ்வுலகிலும், எல்லாச்சாதிசமயத்தார்முன்னிலையிலும், தேவசந்நிதானம்வரையிலும் மகிமைக்குரியதாய், கண்ணியமுடையதாய் மலைமேல்ஏற்றிய மணித்தீபம்போல் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. உலகமுடிவுபரியந்தமும், நித்தியகாலமும் அழியாத ஞானமுத்திரையைப் பதிக்கின்றது. ஓ! குருத்துவமே! உன்மகிமை சதாகாலமும் இலங்குவதாக. பரமபலியும், உந்நத தேவசற்பிரசாதமும் எந்நாளும் நிறைவேறுவனவாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பிரசாதிபதியின் புதல்வி

அமெரிக்க பிரசாதிபதியான திரு. ட்ரூமன் அவர்களின் புதல்வியான செல்விமார்கறெற் ட்றூமன் சிலதினங்களின்முன் பரிசுத்த பாப்பரசரின் பிரத்தியேக பேட்டிபெற்று அவருடன் பதினைந்து நிமிஷங்கள் செலவிடலாயினள். றோமாபுரியிலுள்ள வடஅமெரிக்க குருமடத்திலிருந்து அதன்தலைவரான ஒ'கொனர் மேற்றிராணியார் சமேதராய் அவள் வத்திக்கான்மாளிகை சென்றபோது, சான் தமாசோ மாளிகைமுற்றத்திலே பாப்பரசரின் மந்திரிகாரியாலயத்தைச்சேர்ந்த இரு அமெரிக்க குருசிரேஷ்டர்களால் வரவேற்கப்பெற்றனள். தனது தந்தையர்க்கும், தாயாருக்கும் தமது விசேஷ சோபனவாழ்த்துகளைக் கொண்டுசெல்லும்படியாகப் பேட்டியின்போது பரிசுத்த பிதா அவளைக் கேட்டுக்கொண்டார்.

### கோறிய யுத்த ஓராண்டு

இற்றைக்கு ஓர் ஆண்டின் முன் கோறியயுத்தம் ஆரம்பமானதுமுதல் இதுவரையில் அங்கு 3 மேற்றிராணிமாரும், 42 குருமாரும் உட்பட 55 கத்தோலிக்க மிஷனரிமார் கொலையுண்டும், காணமற்போயுமிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்நாட்டிலுள்ள இரண்டு லட்சம் கத்தோலிக்கரில் அரைவாசிப்பேருக்குமேல் அகதிகளாக வீதிகளிலே கலைத்துவிடப்பட்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் பிணியாலும், குளிராலும், கொடுமையாலும் இறந்துபோயினர். முன்சொன்ன 55 மிஷனரிமாரெல்லாம் சீனக்கம்யூனிஸ்தர்கள் யுத்தத்தில் பிரவேசிக்கமுன்னரே வடகோறியரால் கைதுசெய்யப்பட்டனர். ஏழு குருமாரும், இருகன்னியாஸ்திரீமாரும் இறந்துவிட்டதாகக் கண்டறியப்பட்டிருக்கின்றனர். இவர்கள் சாகஅடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### மற்றேர் புதிய மகாலயம்

றோமாபுரி, அர்ச். பேதுருவானவர் பஸிலிக்கா எனும் மகாலயத்துக்குப்பின் உலகில் மகாப்பிரமாண்டமானதாய் இங்கிலாந்திலே லிவர்ப்பூல் நகரில் கிறீஸ்து இராசாவின் பேரால் ஓர் மகாலயம் கட்டியெழுப்பப்படுகிறது. இது 2,16,500 சதுர அடி விஸ்தீரணமுடையது. 50,000 சனங்களை அடக்கக்கூடியது. டோம் எனப்படும் இதன்பாரிய வில்மச்சுமாடம் 168 அடி குறுக்களவுடையது. இதற்குப்பின் உலகில் மிகப்பிரமாண்டமானதாய்ப் பிறேசில் நாட்டைச்சேர்ந்த அபறெசிடா நகரிலே தேவமாதாவுக்குத்தோத்திரமாக மற்றுமோர் மகாலயம் கட்டப்படவிருக்கிறது. இதன் கோபுரம் 370 அடி உயரமுடையதாகும். கட்டிடம் 1,10,000 சதுர அடி நிலத்தில் பரந்திருக்கும். 12,000 சனங்களை அடக்கக்கூடியஇந்தமகாலயம் பிரதான பலிபீடத்தைச் சூழவரப் பன்னிரு சிறிய பலிபீடங்களைக் கொண்டிருக்கும். அதனால் ஏககாலத்திலே இதில் பதின்மூன்று திவ்வியபூசைகள் நிறைவேற்றலாம். இம்மகாலயம் கிரேக்க சிலுவைமாதிரியாய் அமைக்கப்படும். சிலுவையின் மத்திய பகுதி அர்ச். அந்திரேயாரின் சிலுவைவடிவமாய் இருக்கும். இச்சிலுவையின் நான்கு சன்னாசிமண்டபங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சிற்றாலயத்தைக் கொண்டிருக்கும். இம்மகாலயத்தைக் கட்டியெழுப்பவிருக்கும் இடத்துக்கூடாக ஓடிக்கொண்டிருக்கும் நீரோட்டம் ஒன்று மற்றோர் புறமாகத் திருப்பிவிடப்படும். இதற்கெனப் 18,750 பவுண் செலவிலே ஐந்துலட்சம் கனமீற்றர் மண் அகற்றப்படவிருக்கிறது.

### ஓர் கத்தோலிக்க பாட்டனர்

இங்கிலாந்திலே நோர்த்ஷீல்ட்ஸ் பட்டினத்தில் திரு. ஜேம்ஸ் பன்ரன் எனப்பெயரிய அதிவிருத்தாப்பிய கத்தோலிக்கர் சமீபத்திலே மோட்டர்ரதம் ஒன்றில் அங்குள்ள அர்ச். சூசையப்பர் கோவில் சென்று திவ்வியபூசை கண்டு தனது 101-வது பிறந்த பெருநாளைக் கொண்டாடினர். பின்னர் அப்பட்டினத்திலுள்ள தனது நண்பர்களைச்சந்தித்தார். லிசியேபதியின் அர்ச். சின்னத்தெரேசம்மாளின் பெற்றோர் விவாகஞ்செய்ய எட்டுவருடங்களின்முன் இவர் பிறந்தார். ஒன்பதாம் பத்திநாதர்முதல் ஆறு பாப்புமாரின் ஆளுகைகாலத்தில் உயிர்வாழ்ந்திருக்கிறார் 27 வயசுடையராய் இருந்தபோது புறொட்டஸ்தாந்த மதத்திலிருந்து தனதுபாரியாருடன் இவர் மனந்திரும்பிக் கத்தோலிக்கராயினர். சென்றமகாயுத்தம் நடந்தகாலத்திலே 90 பிராயமுடையவராயிருந்து ஞாயிற்றுக்கிழமைதோறும் ஒருமைல்தூரம் நடந்து திவ்வியபூசை கண்டுவந்தார். தற்போது அத்தனைவயசுடையவராய் இருந்தபோதிலும் இவர் தனது காலைச்செபங்களை முக்கால்மணிநேரம் முழந்தாளிலிருந்தே செய்துவருகின்றார். பின்னர் மத்தியானவேளை அரைமணிநேரம் முழந்தாளிலிருந்து செபிக்கிறார். அதன்மேல் தனது இராச்செபங்களையும் முக்கால்மணிநேரம் முழந்தாட்படியிலிருந்தே செய்துமுடிக்கிறார்.

### சிற்றரசனின் சந்ததியாளர்

ஆபிரிக்காவிலே அராய்க்பேம்நாட்டின் சிற்றரசன் 1886-ம்ஆண்டு இருகத்தோலிக்க மிஷனரிமாருக்கு மரண தண்டனைவிதித்தனன். இது நிகழ்ந்து சுமார் 65 வருடங்களுக்குப்பின் அதாவது நிகழும் 1951-ம் ஆண்டிலே அந்தச் சிற்றரசனதுகுடும்பத்தின் சந்ததியில் உதித்தஒருவர் அமோட்டிவ் பட்டினத்திலுள்ள அர்ச். அகுஸ்தீனூர்கோவிலிலே ஓர் கத்தோலிக்ககுருவாகச் சமீபத்திலே அபிஷேகஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். வண. பேர்ணுட் அராக்பா சுவாமியாரே இந்தக் குரவராவர். ரொகோலாந்திலே லோம்நகரின் விக்கார் அப்போஸ்தலிக்குவான மொஞ். யோசெப் ஸ்றெப்லர் மேற்றிராணியாராலே இவர் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றார். புதிய குருவானவர் அராய்க்பேமிலே தமது முதற் திவ்வியபூசை நிறைவேற்றியபோது அங்குள்ள திரளானகத்தோலிக்கமக்கள் அவருக்கு நற்கருணைப்பாத்திரம் ஒன்றை அன்பளிப்புச்செய்தார்கள்.

## இஸ்பிரீ. ஆக. பின்வரும் 12-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

( லூக். 10 : 23—37 )

அக்காலத்தில்யேசுநாதர் தம்முடையசீஷர்கள் பக்கமாய்த் திரும்பித் திருவுளம்பற்றினதாவது: நீங்கள்பார்க்கிறவைகளைப் பார்க்கிறகண்கள் பாக்கியம் பெற்றவைகள். ஏனெனில், அநேகதீர்க்கதரிசிகளும் அரசர்களும் நீங்கள்காண்கிறவைகளைக் காணவும், நீங்கள்கேட்கிறவைகளைக் கேட்கவும் ஆசித்திருந்தாலும் அவர்கள் அவைகளைக் காணவுமில்லை, கேட்கவுமில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்போது, இதோ! நீதிசாஸ்திரியாகிய ஒருவன்எழுந்து அவரைச் சோதிக்க: போதகரே, நான்எதைச்செய்து நித்தியசீவியத்தை அடைவேன்? என்றான். அவரோ அவனைநோக்கி: தேவகட்டளையிலே எழுதப்பட்டிருக்கிறதென்ன? எவ்விதமாய் வாசிக்கிறாய்? என்றுகேட்டார். அதற்குஅவன் பிரத்தியுத்தரமாக: உன்முழுஇருதயத்தோடும், உன் முழு ஆத்துமத்தோடும், உன்சகல சத்துவங்களோடும், உன்முழுப் புத்தியோடும் உன்தேவனாகிய கர்த்தரையும், உன்னைப்போல உன்அயலானையும் சிநேகிப்பாயாக என்று சொன்னதும்; அவர் அவனைநோக்கி: நீ சரியாய் மறுமொழி சொன்னாய், இதைச்செய்வாயாக, சீவிப்பாய்என்றார். அவனோவெனில் தன்னைநீதிமான் என்று காட்டமனதாகி: என் அயலான் யாரென்று யேசுநாதரைக் கேட்டான். அதற்குயேசுநாதர் மறுவுத்தாரமாகத் திருவுளம்பற்றினதாவது: ஓர்மனிதன் எருசலேம்நகரைவிட்டு ஜெரிக்கோ நகரிக்குப்போகையில் கள்ளர் கையில்அகப்பட்டான். அவர்கள் அவனிடத்திலிருந்ததையெல்லாம் பறித்துக்கொண்டு அவனையுங் காயப்படுத்திக் குற்றுயிராய்விட்டுப் போனார்கள். ஆனால், ஓர் ஆசாரியன் அவ்வழியாய்வர நேர்ந்தது. அவனைக் கண்டு கடந்துபோனான். அப்படியே லேவியன் ஒருவனும் அவனண்டையில்வந்து, அவனைக்கண்டபோதிலும் கடந்துபோனான். ஆனால், வழிப்போக்கனான சமாரியன்ஒருவன் அவனண்டையில்வந்து, அவனைக் கண்டுமனமிரங்கி அவனை நெருங்கி, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சஇரசமும் வார்த்து அவைகளைக் கட்டினான். பின்னும் அவனைத் தன்வாகனமிருகத்தின்மேலேற்றி ஓர்சத்திரத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் அவனைப்பராமரித்தான். மறுநாள அவன் இரண்டுதெனியர் என்னும் நாணயங்களை எடுத்துச் சத்திரக்காரனுக்குக் கொடுத்து: இவனைப் பராமரித்துக்கொள். நான்திரும்பிவரும்போது நீஅதிகமாய்ச் செலவழித்திருப்பதெல்லாவற்றையும் உனக்குஉத்தரிப்பேன் என்றான். ஆகையால் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்குநேசமுள்ள அயலானாய் இருந்ததாக இம்மூவரில் எவன் உனக்குத் தோன்றுகிறான்? என்று கேட்டார். அதற்குஅவன்: அவனுக்குத் தயைசெய்தவனே என்று சொல்ல, யேசுநாதர்: நீயும் போய் அப்படிச்செய்யென்று அவனுக்குத்திருவுளம்பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சுகாதாரவார விழா

அச்சுவேலிப்பகுதியில் ஆடிமாதம் 23-ந்திகதிதொடக்கம் மூன்றுநாட்களாகச் சுகாதாரவாரவிழா சிறப்புடன் நடந்தேறியது. 24-ந்திகதி பிற்பகல் 4 மணிக்கு அச்சுவேலிக் கிராமவைத்தியசாலையில் யாழ்நகர்ச் சுகாதார வைத்தியரது தலைமையின்கீழ் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் காட்சி நடைபெற்றது. அதிலே முதன்மையான நான்குகுழந்தைகட்குப்பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

25-ந்திகதிபிற்பகல 3 மணிக்கு அச்சுவேலிக்கிறிஸ்ரியன்கல்லூரிமண்டபத்திலே கிராமச்சங்கத்தலைவர் திரு. S. வீரசிங்கம்அவர்கள் தலைமையின்கீழ் பாடசாலைமாணவரது பேச்சு, பாட்டு, கும்மி, நடிப்பு என்பன ஆரம்பமாயின. இப்போட்டியில் அநேகபாடசாலைகள் பங்குபற்றின. போட்டியில்நடந்தநான்குவிஷயங்களிலும் அச்சுவேலி, சென்தெரேசா பாடசாலையே முதலாம்வெற்றி ஈட்டி நான்குவெள்ளிக்கிண்ணங்களும், நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றுக்கொண்டது. பரிசில்களைத் தலைவர் வழங்கினார்.

பின்னர் சுகாதாரவைத்தியரும், கொக்குவில் சுகாதார பரிசோதகர் திரு. N.செல்லப்பா அவர்களும், அச்சுவேலி வைத்தியசாலைஅதிகாரி திரு. S. S. வடிவேல் அவர்களும் முறையே: கிராமச்சுகாதாரம், பாண்டுவியாதி, நோய்களைத்தடுத்தல் என்பனபற்றிச் சொற்பொழிவாற்றினர். இவையாவும் இனிதுமுடிந்தபின் சுகாதாரவார விழாவைச் சிறப்பிக்கும்பொருட்டு அச்சுவேலிக் கிறிஸ்ரியன் கல்லூரி மாணவியால் ஓர்நடனமும், சென் தெரேசா பாடசாலைமாணவிகளால் விசேஷவிதமான ஓர்நாட்டியமும், இருசிறந்தநடனங்களும் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டன. ஈற்றில் கிராம முன்னேற்றச்சங்க காரியதரிசியால் யாவாக்கும் நன்றிகூறப்பட்டதும் விழா இனிதுமுடிந்தது. —நிருபர்

—இத்தாலியிலே பொதுத்தேர்தல் நடைபெற்றபின்னர் அத்தேச பிரதமரான சிஞ்ஞோர் டே காஸ்பறி அவர்கள் யுத்தத்துக்குப்பிறகு தமது ஏழாவது மந்திரிசபையைத் தற்போது ஆக்கியிருக்கின்றார். அதனால் பத்துநாட்களாய் இருந்துவந்த இத்தாலியஅரசியல் நெருக்கடி இப்போது நீங்கிப்போயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நல்லூர் மீசாம்



## முகமாலை அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

ஆவணிமாதம் 23-ந் திகதி
மெழுகுவர்த்திச்
சுற்றுப்பிரகாரம்.

ஆவணிமாதம் 24-ந் திகதி
காலை 7 மணிக்குப்
பாடற்பூசை,
சுற்றுப்பிரகாரம்.

எமதுமீசாமின் கருமங்களைப்பற்றிச் சில தினங்களுக்குமுன் ஆங்கிலத்தில் ஓர்சிறுபிரசுரம் விடுத்தோம். அதிலே அர்ச். பிலோமினம்மாளிடம் சகாயங்கள் பெற்றவர்கள்பலர் அவவை மறந்துவிட்டார்கள்போலும் என்று ஒருசிறு குறிப்பு எழுதியிருந்தோம். இதைக் கண்ணுற்றதும் அவவுடைய பக்தர்களில்ஒருவர்:

எமது உபகாரியை மறப்போமோ? என்ற தலையங்கத்தின்கீழ் ஓர் கட்டுரை எழுதிஅனுப்பினர். அதிலே அவர், நெடுங்காலமாக அர்ச். பிலோமினம்மாள் தம்மையும், தமது குடும்பத்தையும் தமதுபாதுகாவலின்கீழ் வைத்துப் பாதுகாத்துப் பராமரித்துச் செய்துவந்துள்ள பலநன்மைகளையும் எடுத்துக்காட்டியிருந்தார். அவைகளை நாம் இங்குபிரசுரிப்போமாகில் ஓர் பிரத்தியேககருமத்தைப் பொதுக் கருமமாக்குவதாய் முடியுமென அஞ்சுகிறோம். ஆயினும் அர்ச். பிலோமினம்மாள்செய்த நன்மைகளை மறவாது அவவுக்குப் பிரமாணிக்கமாயும், நன்றியறிதலாயும் இருப்போர் பலரெனக் கண்டு சந்தோஷிக்கின்றோம்.

முகமாலையிலே அர்ச். பிலோமினம்மாள் திருநாள் ஆவணிமாசம் 23-ம் 24-ந்திகதிகளில் முடிவாகும். இதற்குப் பலதினங்களுக்கு முன்னர் தொட்டுத் தானே முகமாலை ஒருசிறுகிராமமாகக் காட்சியளிக்கத் தொடங்கிவிடும். மாமரங்களும், ஆலமரங்களும் குடைவிருட்சங்கள்போல் அங்கு யாத்திரிகர்கள்வந்து பாக்கத்தங்கும் விடுதிகளுக்கு நிழல்கொடுக்கும். தண்ணீர்வசதியும், உணவுவசதியும் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கும். காலை மாலை ஆராதனைகளுடன் நின்றுவிடாது திருப்பண்ட வணக்கமும், திருப்பண்ட ஆசீர்வாதமும் நடைபெறும். இப்பதியில் தங்குங்காலத்தை ஓர்ஏகாந்த ஞானொடுக்ககாலமாகக் கழிக்க எல்லோர்க்கும் வசதிஅளிக்கப்படும். இந்த ஞானத் தடாகத்தை எல்லோருமே ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். நாமும் அவர்கள் ஆசிக்கும் ஞானத்திருப்தியை அவர்களுக்குஅளிக்க அர்ச். பிலோமினம்மாள் உதவிசெய்வாவாக.

பஸ்பிரயாணத்துக்கும், றெயின்வண்டிப்பிரயாணத்துக்கும் வேண்டிய வசதிகள் செய்திருக்கின்றோம். 22-ந் திகதி தொடக்கம் றெயின்வண்டிகள் கோவிலுக்குமுன்பாகத் தரித்துச்செல்லும்.

**அர்ச். அந்தோனியார் திருநாள், மானிப்பாய்:** இவ்வருடம் ஆனி மாதம் 17-ந் திகதி இப்பதியில் கொண்டாடப்பட்ட இத்திருநாள் சனத்திரளாலும், பக்தியருட்சியாலும் சிறந்த விதத்தைப்பற்றிப் பாராட்டாதவர்கள் இல்லை. நன்றித்துதியே அவர்களின் பிரதானநோக்கமாய் இருந்தது.

அங்குகூடிய சனத்திரளின் மத்தியிலே தூரவிடத்தில் வசிப்போராய், எமக்கு அறிமுகமான ஒருவர் வந்துநிற்பதையும் அவதானித்தோம். "என்ன, நீங்களும் இங்கு வந்துவிட்டீர்களா?" என்றுகேட்டபோது அவர்மறுமொழியாக: "எனக்கு நெருப்புக்காய்ச்சல் வந்து இரண்டுதரம் மறுதலித்தது. நான் உயிர்பிழைப்பேனென்று ஒருவரும் நம்பியிருக்கவில்லை. எனக்கு உயிர்ப்பிச்சை பெற்றுத்தந்த அப்பரிடம்வந்தேன்" என்றார்

சென்றவருடம் திருநாட் தினங்களிலே கால்ஊன்றித்தானும் வைக்க இயலாது அரைந்துஅரைந்து வந்தஒருவர் இப்போது ஏறக்குறைய ஒருமைல் தூரத்துக்குஅப்பாலிருந்து பொல்லூன்றிக்கொண்டு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அர்ச். அந்தோனியாரிடம் வந்துபோகக்காண்கிறோம். இவர் இனிமேல் பொல்லின் உதவிதானும் இல்லாது நடக்கக் கோடியற்புதர் இவருக்கு உதவிசெய்வாராக!

"நானும் பலஇடமும் அலைந்தேன், உலைந்தேன். கையெடாதபல கோவில்களெல்லாம் கையெடுத்தும் காரியம் கைகூடாது மனஞ்சோர்ந்தேன். ஒருநாள் என்வீட்டுக்குவந்த ஒருவர் மானிப்பாய், அர்ச். அந்தோனியாரிடம் மன்றாடும்படி எனக்கு ஆலோசனைகூறினர். ஒருநவநாள் தொடங்கினேன். நவநாள் முடியாமுன்னரே நான் கேட்டகாரியம் கிடைத்தது. மானிப்பாயிலே அர்ச். அந்தோனியார் பிரஸ்தாபம்அடைவது தேவனுக்குச் சித்தம்போலும்" என்று மற்றொருவர் கூறினர்.

**சமாகமம்:** ஒருசிறு மகாநாடு. பிறமீசாமிலிருந்து வந்து கூடினோர் ஒருசிலர் மாத்திரமெனலாம். நாமும் அதைவிரும்பவில்லை. அது ஓர் உள்மீசாம் கொண்டாட்டமாக மாத்திரம் இருக்கவேண்டுமென ஆசித்தோம். எம்மைஅறியாமலே எமதுபலத்தைக் கண்டு மகிழ்ந்தோம். தேவனுக்குத் துதிகூறினோம். இந்த மீசாமை அடியிட்ட ஞானப்பிரகாசர் சுவாமியாரை உள்ளமுவந்து பாராட்டினோம். எமது மீசாம் கிறீஸ்தவர்களின் விசுவாச திடத்தை மெச்சினோம். ஏறக்குறைய ஆயிரம்பேர்வரையில் ஒன்றுகூடினோர்கள். இவர்கள் வறியவர்களாய்இருந்த போதிலும் தூர இடங்களிலிருந்து கால்நடையிலும், கார்களிலும், வான்களிலும், பஸ்களிலும் வந்துகூடியது ஓர்சிறுகருமம் அல்ல.

சற்பிரசாதநாதரை ஆராதித்து வணங்கி ஆசிபெற்றுக்கொள்ள ஒருபந்தல்மாத்திரம் அதிசிறப்பாய் அலங்கரிக்கப்பெற்றமைதானத்தில் அமைக்கப்பட்டிருந்தது. பள்ளிச் சிறுர்கள் ஒரேமாதிரியான உடைகள் அணிந்தபடி வரிசைவரிசையாக இனியகீதங்கள்பாடிச்சென்றார்கள். ஒலிபரப்பியின்உதவியோடு ஏனையோர் செபங்கள் ஓதிச்சென்றார்கள். திவ்விய நற்கருணைப்பேழையில் தேவரீர் மிகவும் கைவிடப்பட்டிருப்பதற்குப் பரிகாரமாக... யேசுவே நாங்கள் உம்மை ஆராதிக்கிறோம்; இன்னும் உம்மை அறியவும், விசுவசிக்கவும், நேசிக்கவும் பாக்கியம் பெறுதவர்களுக்காக யேசுவே, உம்மை மன்றாடுகிறோம்... அதிவண. விக்கார்ஜெனறல் சுவாமியவர்கள் திவ்விய சற்பிரசாதநாதரை ஏந்திச்செல்ல, பலகுருமார் திவ்விய பூசை உடைகள்அணிந்து புடைசூழ்ந்துசெல்ல, பூசைப்பரிசாரகர் தூபகலசம் ஏந்திச்செல்ல, சிறுவர்கள் மலர்கள் தூவிச்செல்லச் சுற்றுப்பிரகாரம் மீண்டும் அதேபந்தலைச்சேர்ந்தது.

தேவரீர் மனுஷரை இரட்சிக்க மனுஷஅவதாரம் எடுத்தீர்.

தேவரீர் மரணத்தைச் செயித்து மோட்சஇராச்சியத்தைத் திறந்தீர்.

தேவரீர் பிதாவானவரின் மகிமைப் பிரதாபத்தோடு அவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறீர்.

தேவரீர் உலகத்தைநடுத்தீர்க்க வருகிறவர் நீர்தாமே,

ஆதலால் தேவரீர் உமதுவிலைமதிக்கப்படாத திரு இரத்தத்தால் மீட்டுக்கொண்ட அடியோர்க்குக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**வெற்றிமாதா கோவில்:** தேவதாயார்போரால் எமது மீசாமில் கோவில்கள் மலிந்து பொலிந்துபோயிருப்பதானது, தேவதாயாரின்நாமம் கிறீஸ்துநாதரின்மட்டில் விசுவாசத்தின் முன்னோடிஎன்பதை வெளிப்படையாகக் காண்பிக்கின்றது. செபமாலைமாதாவின் பேரால் மூன்று கோவில்கள் இருக்கின்றன. சென்மராக்கினி, ஆரோக்கியமாதா, புதுமை மாதா, லூர்துமாதா, பரலோகமாதா என்பனவாகப் பல நாமங்கள்தாங்கிய கோவில்கள் இருக்கின்றன. சிலநாட்களுக்குமுன் வெற்றிமாதாபேரால் ஓர் கோவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது எங்கேயென்று இப்போது எம்மிடம் கேளாதேயுங்கள். அது உருவாகித் தலைநிமிர்ந்து தன்னைக்காண்பிக்கும்போது உங்களுக்குஅறிவிப்போம். ஆனால், இப்போது ஒருகுத்தகை வளவிலே ஒருகொட்டில் கோவிலாய் மாத்திரம் இருப்பினும் மாதந்தோறும் நாம் அங்கே திவ்வியபூசை நிறைவேற்றும்போது அநேகர் சமுகமளித்து வருகிறார்கள்.

ஓடர் அனுப்புவது:

Sub-Post office,
NALLUR.

விலாசம்:

Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

## நாடு சங்கதிகள்

—பிரான்சிலே பொதுத்தேர்தல் நடைபெற்றதுமுதல் கடந்தமூன்று வாரங்களாக மந்திரிசபை இன்னுமே ஆக்கப்படவில்லை. அதாவது பிரான்ஸ் அரசாங்கமின்றியே இருந்துவருகிறது. ஓர்மந்திரிசபையை ஆக்குமாறு பிரதமர்ஒருவரைக் கண்டுபிடிப்பதில் பிரான்சியபிரசாதிபதி இன்னுமே அனுகூலம் அடையவில்லை. எம். போல் றேய்னோ ஐந்துதரம்முயன்றும் காரியம் பலிக்கவில்லை.

—அத்திலாந்திக்நாடுகளின் கூட்டுப் பாதுகாப்புவிஷயமாய்ப் பிரான்சிய அரசு நிகழும் 1951-ம்ஆண்டின் இறுதியோடு யுத்தசேவைக்கு எந்தவேளையுமேதயாராய் ஐந்துபடைவகுப்புகளையும், மூன்றுநாள் அறிவித்தலிலே தயாராகும் வேறு ஐந்துபடைவகுப்புகளையும் கொண்டிருக்குமென்று பிரான்சிய பாதுகாப்புமந்திரியார் அறிவித்திருக்கின்றார்.

—பிரான்சிய புதியபாராளுமன்றத்திலே ஜெனறல் தேகோலின்கட்சி அதிபெரும்தொகையான பிரதிநிதிகளையும், இரண்டாவது கம்யூனிஸ்தகட்சி அதிகதொகையான பிரதிநிதிகளையும் கொண்டிருக்கின்றன. மத்தியகட்சிகளிலேயே பிரதமர் தெரியப்படவேண்டுமென்ற நியதியிருப்பதாலே முன்சொன்ன இருகட்சியினருடன் எவரும் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். அதனால் புதியமந்திரிசபையை ஆக்குவது சங்கடமாயிருக்கிறது.

— யுத்தங்காரணமாக ஐரோப்பாவிலே தங்கள்நாடுகள், வீடுவாசல்களை இழந்துபோன அகதிகளாய் இன்னும் 20 லட்சம்சனங்கள் எங்காவது குடியிருத்தப்படவேண்டியோராய் இருப்பதாக ஐக்கியநாடுகளின் ஸ்தாபன கம்மிஷனர் அறிவித்திருக்கின்றார். உலகில் ஏற்பட்டுவரும் அமைதியின்மையாலே இந்த அகதிகள்தொகை மேலும் அதிகரித்துவருகிறதாம்.

— ஆபிரிக்காவிலே 'கோல்ட் கோஸ்ற்' அதாவது பொற்கரை நாட்டிலே 1931-ம் ஆண்டுக்கும் 1948-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட 17வருடங்களிலும் கத்தோலிக்கரின் தொகை மும்மடங்காக அதிகரித்துத் தற்போது 3,09,390 பேரை அது கொண்டிருக்கிறது. பதினேழு வருடங்களின்முன் அந்நாட்டிலிருந்த கத்தோலிக்கர் 85,087 பேரே.

—சோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலிருந்து மேற்குஜேர்மனியிற்போய் அடைக்கலம் புகுந்திருக்கும் அகதிகளுள் அநேககத்தோலிக்ககுருமாரும் அடங்கியிருக்கின்றார்கள். அப்போதுகிழக்கு ஜேர்மனியில் ஆறாயிரம்குருமார் இருந்தவிடத்தில் தற்போது சுமார் 2,800 குருமாரே இருந்துவருவதாகவும், இவர்கள்தொகையும் வரவரக்குறைந்து வருவதாகவும் வத்திக்கானிலிருந்து அறிவிக்கப்படுகிறது.

—சப்மறின்கள்எனப்படும் நீர்மூழ்கிக்கப்பல்களிலே சுவாசம்விடும் நவீன கருவிஒன்று தற்போது அமைக்கப்பட்டுவருகிறது. அதுகொண்டு அவைகள் தண்ணீரின்மேற்புறத்துக்கு அடிக்கடி வாராமல் வாரக்கணக்கிலே தண்ணீரின்கீழ் தங்கியிருக்கக்கூடியனவாகும். இந்தக்கருவிபூட்டிய அலையன்ஸ்என்ற பரிசோதனைக்கப்பல் 3,000 மைல்தூரம் சமீபத்தில் பிரயாணஞ்செய்தபோது முழுநேரமும் தண்ணீருக்குக்கீழேயே சென்றதாம்.

—யப்பானிய சமாதானஉடன்படிக்கைக்குக் கைச்சாத்திடுவதில் தேசிய சீனாவையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற ஓர்வேண்டுகோளை இரத்தத்தில் எழுதுவதற்காகப் போர்மோசாவிலுள்ள மாஷல்சியாங்-கை-ஷெக்கின் பட்டாளம் ஒன்றைச்சேர்ந்த போர்வீரர்கள் தங்கள் கைவிரல்களிலிருந்து இரத்தங் கொடுத்திருக்கின்றனராம். இந்தவேண்டுகோள் அமெரிக்கஅரசினருக்கும், ஐ. நா. ஸ்தாபனத்துக்கும் அனுப்பப்படவிருக்கிறது.

—சீனாவிலே பாப்பரசரின்ஸ்தானிகராக இருந்துவந்த றிபெறிஅதிமேற்றிராணியாரைச் சீனக்கம்யூனிஸ்தர்கள் மீட்டும்மீட்டும் அச்சுறுத்திக் கொண்டு வந்தமையாலே அவர்சென்ற மாதம் 11-ந்திகதி நான்கிங்நகரிலிருந்து ஹொங்கோங்தீவுக்குப் பிரயாணமாகிவிட்டனர். இவர் ஹொங்கோங்கிலிருந்துகொண்டு சீனாவிலே பாப்பரசரின் ஸ்தானிகராகத் தொடர்ந்துகடமை பார்க்க முயன்றுவருவார்.

—அமெரிக்கஐக்கியதேச கார்இராசாவென்று அறியப்படுகிறவரான திரு. ஹென்றிபோட்அவர்கள் தமதுபாரியாரோடும், இருபிள்ளைகளோடும் சென்ற 12-ந்திகதிவத்திக்கான்மாளிகைசென்று பரிசுத்தபிதாவின் அந்தரங்க பேட்டி பெற்றுக்கொள்ளலாயினர். போட்காரின் முதல்வரான இவர்தந்தையார் ஓர் புறொட்டஸ்தாந்தராய் இருந்தபோதிலும் இவரும், பாரியாரும், பிள்ளைகளும் கத்தோலிக்கராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

ஆவணிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 3 | அர்ச். முடியப்பர்சரீரங் கண்டெடுத்ததிருநாள் | (சி) |
| சனி | 4 | அர்ச். சாமிநாதர் | (வெ) |
| ஞா | 5 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 12-ம் ஞாயிறு— அதிசய பனிமாதாதிருநாள் | (ப) |
| திங் | 6 | கர்த்தர் மறுரூபமானதிருநாள் | (வெ) |
| செ | 7 | அர்ச். கயித்தான் | (வெ) |
| புத | 8 | அர்ச். சிறியாக்குசப்பர் | (சி) |
| வியா | 9 | அர்ச். வியான்னிஅருளப்பர் | (வெ) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
ஆவணிமாதம் 2-ந் திகதி


## ஆவணி மாதம்

ஆவணிமாதம் ஆங்கிலமொழியிலே 'ஆகஸ்ற்' மாதமென அறியப்படுகிறது. சேசார் அகுஸ்துஸ் எனும் றோமைச்சக்கிரவர்த்தியின் நாமத்தை என்றைக்கும ஞாபகப்படுத்தி வைக்குமாறே 'ஆகஸ்ற்' எனும்நாமம் வழங்கப்படலாயிற்று. ஆயினும் இந்த மாதத்திலே கத்தோலிக்கஉலகம் தான்கொண்டுள்ள பக்தி காரணமாக ஓர்அரசனை அல்ல, சேசார்அகுஸ்துஸ் சக்கிரவர்த்தியை அல்ல, ஆனால் அவர்களிலும் மிகமேம்பட்டுவிளங்கும் ஓர் பரமஇராக்கினியையே சிந்திக்கின்றது. அவர்நாமம் கன்னிசுத்த மரியம்மாள். இந்தமாதம் 15-ந் திகதியன்று அப்பரமநாயகி பரலோகத்துக்கு ஆரோபணமானதையும், அங்கே பரலோகஇராக்கினியாக மகுடதாரணமானதையும் நாம் ஞாபகப்படுத்தி, அவரிலே நீங்காத பத்திவைராக்கியம் கொண்டுள்ள பக்தர்களில் நாமும்ஒருவராய் இருந்து வருவோமாக! இன்னும் மாதாவின் மோட்சாரோபணத்திருநாளின் எட்டாம் நாளாகிய இம்மாதம் 22-ந் திகதியன்று அவருக்குத் தோத்திரமாய் நவமாக ஆக்கப்பெற்ற மற்றோர் பெருநாள் அவரின் மாசற்றஇருதயத்திருநாளாகும். மாசற்றஇருதயநாயகியைப் பின்தொடர்ந்து நாமும் மோட்சஇராச்சியத்தில் பிரவேசிக்க ஆசிப்போமானல், நாமும் பாவமாசின்றிப் பரிசுத்தமாகச்சீவித்துவர வேண்டுமென்பதை இது ஞாபகப்படுத்துவதாகும். மேலும் பரிசுத்தவருட யாத்திரிகர்கள் சந்திக்கவேண்டியனவாய், றோமாபுரியிலுள்ள நான்குபிரதான ஆலயங்களுள் ஒன்றின் திருநாள் இம்மாதம் 5-ந் திகதி வருகின்றது. "சந்தா மரியா மஜியோறே" அதாவது தேவதாயாரின் மிகப்பெரிய ஆலயமாகிய பஸிலிக்காவே அதுவாகும். கடுங்கோடைகாலத்திலே மாதா அற்புதவிதமாகப் பனிபெய்துகாண்பித்த — தமது பக்தரான கொடையாளிஒருவருக்கு அடையாளமாகக் காண்பித்த—அதே இடத்திலே இது கட்டப்பட்டுள்ளது. பனிமயமாதாதிருநாளே அன்று கொண்டாடப்படுகிறது.

ஆகவே, இம்மூன்று திருநாட்களையும் தக்கவாறு கொண்டாடிப் பரமஅன்னையின் சலுகையை இரந்துகொள்வோமாக!

## கோறியயுத்தம்

கம்யூனிஸ்த வடகோறியநாடு இரும்புத்திரைக்குப் பின்புறமாகவுள்ள சோவியற்கூட்டுநாடுகளில் ஒன்றாகும். தென்கோறிய சுதந்திரநாட்டினை ஆக்கிரமிப்பதற்கென அங்குசோவியற்முறையில் அணிவகுத்துப் பயிற்சியளித்து ஆயுதபாணிகள் ஆக்கப்பட்ட கம்யூனிஸ்தபடைகள் இற்றைக்குச்சுமார் ஓராண்டின்முன்னே தென்கோறியாவில் திடீரெனப்படையெடுத்த தன்விளைவாய் ஐக்கியநாடுகளின் ஸ்தாபன பாதுகாப்புச்சங்கங் கூடி இந்தஆக்கிரமிப்பை எதிர்ப்பதெனத் தீர்மானித்தது. அத்தீர்மானத்தை ஆதரிப்பதென அமெரிக்கஐக்கியதேசம்உட்பட 52 சுதந்திரநாடுகள் உறுதிவாக்களித்தன. அவற்றிலே 16 நாடுகள் ஐக்கியநாடுகளின் சேனைகுப் படைத்துணை அளிக்க முன்வந்தன. அதனல் கோறியஆக்கிரமிப்பை எதிர்த்துக் கடந்த ஓராண்டளவாய் நடந்துள்ளயுத்தத்திலே ஐ. நா. படைகள் இரண்டாயிரம்சதுரமைலுக்குச் சற்றேகூடியதேசப் பரப்பை வெற்றிகொண்டன.

அம்மட்டா! கம்யூனிஸ்தசீனவின் தலைவரான மோ-ரிஸி-துங்கின் சிறந்தபயிற்சிபெற்ற படைவகுப்புகள் சிலவற்றையும், இனிமேல் திரும்பவும அவைகள் கண்டுகொள்ளமுடியாத யுத்தோபகரணங்களையும் பரிநாசமாக்கிவிட்டன. தரையிலிருந்து வெடி தீருவதிலும், ஆகாயத்திலிருந்து குண்டுவீசுவதிலும ஐ. நா. படைகளுக்குள்ள இணையற்றபலமானது, சீனப் படைகள்மத்தியிலே பெரும் உயிர்ச்சேதம் உண்டுபண்ணிவிட்டது. இக்காலமாதிரியான ஆயுதந்தாங்கிய ஐ. நா. படைகளை எதிர்த்துப் போராடுவது இயலாக்கருமமென்பதை அவைகள் நன்குதெளிந்துகொண்டன. கம்யூனிஸ்த வடகோறிய படைகள்மத்தியிலும் உயிர்ச்சேதம் மிகவதிகமாகும். அங்குள்ள ஆஸ்பத்திரிகளிலே லட்சக்கணக்கான வடகோறியர்களும், சீனர்களும் வைசூரி, விஷசுரம்ஆதியன கண்டுவருந்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தநிலைமையிலே மோ-ரிஸி-துங விழுந்துவ்வீசையில் மண்புரளாதவகையிலே யுத்தநிறுத்த மகாநாட்டுக்கு உடன்பட்டமை ஓர்ஆச்சரியமன்று. ஆனல், இந்தமகாநாடு இழுபறியாகவே இன்னமும் நடந்துவருகிறது. அது நன்மையாக முடிந்தபோதிலும கோறியாவிலே ஐ. நா. இன்னோக்கம ஆரம்பத்திற்போலவே இனிமேலும் இருந்துவரும். யுத்தநிறுத்தமுண்டாய்க் கோறியாவிலே அமைதி நிலவுகிறவரையில் ஐ. நா. படைகள் அங்கேயேஇருந்துவரும்.

பொதுவிலே [illegible] கேசோங் [illegible] ஷணைகள் இரத்தக்களரியை நிறுத்தும் நோக்கத்தோடுதான் இப்போது நடைபெறுகின்றன என்று நம்புதற்கிடமில்லை. ஏனெனில், "கம்யூனிஸ்தர்கள் கோறியாவில் உள்ளபடியே சமாதானத்தை ஆசிக்கிருர்களா?" என்று சென்ற ஞாயிறன்று அமெரிக்க ட்றூமன்பிரசாதிபதியை வினவியபோது, "எந்தவேளையிலும் புதிய ஆக்கிரமிப்புநடவடிக்கைகளை நடத்தக்கூடிய நிலைமையிலே சோவியற்அரசினர் தங்களை ஒழுங்குபடுத்திவருகின்றனர்; வடகோறியர்களும், சீனக்கம்யூனிஸ்தர்களும் தரைப்பாவனைக்கும், ஆகாயப்பாவனைக்குமாகச சோவியற் அரசினிடமிருந்து புதியபோராயுதங்களைத் தொடர்ந்துபெருந் தொகையாகப் பெற்றுக்கொண்டுவருகின்ருர்கள்" என அவர் விடையளித்திருப்பதே அதற்குப்போதிய சான்ருகும்.

## அர்ச். டிலாசால்

உலகில் இளைஞர்களுக்குக் கிறீஸ்துவகல்வி பயிற்றுதலையே தனது முக்கியமும், ஏகமுமான லட்சியமாகக் கொண்டுள்ள— அதற்கெனத் தன்னை முற்ருகவே அர்ப்பணஞ்செய்துள்ள பிறதர்மார்களின், அதாவது ஆசிரியசந்நியாசர்களின் மிகப்பெரிய சபையாது? இன்று உலகின் பல்வேறுபகுதிகளிலும் கல்வித்தொண்டாற்றிவருகின்ற 21,000 ஆசிரியசந்நியாசர்களைக் கொண்டுள்ளதெனப் பெருமை பாராட்டத்தகும் மிகப்பெரிய சந்நியாசசபை யாது? நமது ஸ்ரீலங்காவிலே கொட்டாஞ்சேனையில்விளங்கும் பேரான சென் பெனடிக்றகல்லூரி முதலாம்ஒன்பதுகல்விச்சாலைகளைப் புகழ்ச்சிக்குரியவிதமாய் நடாத்திவருகின்ற ஆசிரியசந்நியாசர்களின் சபையாது? கிறிஸ்தியன்பிறதர்மாரெனச் சாதாரணமாக அறியப்படுகின்ற கிறிஸ்தகலாசாலைகளின் பிறதர்மார்சபையேயாம். தமது உடல்பொருள்ஆவி மூன்றினையும் கிறீஸ்துவ கல்விக்கெனத் தியாகஞ்செய்து, அத்துணை பெரும் தற்பரித்தியாக சிந்தையுடன் அல்லும்பகலும்அயராது கல்வித்தொண்டில் ஈடுபட்டிருக்கின்ற இந்தப்பிறதர்மார்களின் சபையைஅடியிட்ட அம்மகானுபாவர் யார்? ஆசிரியர்கள், ஆசிரியமாணவர்களின் பரலோக பாதுகாவலராய் இருந்துவருகிறவர் யார்? தனவந்தர்களின் பிள்ளைகளைப்போலவே தரித்திரரின்பிள்ளைகளும் சமத்துவமாகக் கல்விபயிலச் சந்தர்ப்பமளித்து அக்காலத்திலேயே இலவசப்பாடசாலைகளை ஸ்தாபித்தவர் யார்? அர்ச். டிலாசால் அருளப்பரே.

அர்ச். டிலாசால் அருளப்பர் பிரான்ஸ்தேச றீம்ஸ்நகரிலே பிரபுக்கள் குடும்பம்ஒன்றில் 1651-ம் ஆண்டு சித்திரைமாதம் 30-ந் திகதி பிறந்தார். கிறீஸ்துவகல்வித் தொண்டுக்கெனத் [illegible] அர்ப்பணஞ் செய்ய [illegible] 1683-ம் ஆண்டு தமது மகிமைசலாக்கியங்களைத் துறந்தார். பஞ்சகாலத்திலே தமது செல்வசம்பத்துக்களையெல்லாம் ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுத்தார். முதல் கிறிஸ்தியன் பிறதர்மாரை 1681-ம் ஆண்டு தமது தந்தையாரின்மனையில் வதியச்செய்தார். ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளையும், விடுதிப்பாடசாலைகளையும் முதன் முதலாக ஸ்தாபித்தார். 40 ஆண்டுகளுக்குமேல் தேவதோத்திர வாஞ்சையுடன் கிறீஸ்துவகல்விக்காக, இளைஞர்களின் ஆன்மசரீர நல்வாழ்வுக்காக ஆர்வத்துடன் உழைத்துவந்த இவர் 1719-ம் ஆண்டு பரமபதம் அடைந்தார். 1900-ம் ஆண்டு அர்ச்சியசிஷ்டபட்டஞ் சூட்டப்பெற்றுர். இத் திருப்பட்டம் இவருக்கு அருளப்பெற்ற 50-ம் ஆண்டுநிறைவுவிழா சென்ற 1950-ம்ஆண்டு மாசிமாதம் 15-ந் திகதி வந்தபோது, பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசர் அவரைச் சகலஆசிரியர்களுக்கும், ஆசிரியமாணவர்களுக்கும் பாதுகாவலராகப் பிரகடனஞ் செய்து, அவரால்அடியிடப்பெற்ற கிறிஸ்தியன்பிறதர்மார் சபைக்கு நவமானதோர் மகிமை பெருமையை உண்டுபண்ணலாயினர்.

கிறிஸ்தியன்பிறதர்மாரின் கல்வித்தொண்டானது திருச்சபைக்கும், அரசாங்கத்துக்குமே செய்யப்படுவதாகவே, அவர்கள் உலகத்துக்கேஇன்றியமையாத காத்திரமானஓர் தொண்டை ஆற்றிவருகின்ருர்கள். திருச்சபைக்குத் தேவைப்படுகிறவர்கள் உத்தம கிறீஸ்தவர்களே. அரசாங்கத்துக்குத் தேவைப்படுகிறவர்கள் உத்தம பிரசைகளே. ஆதலால் கிறிஸ்தியன்பிறதர்மார் திருச்சபையினதும், அரசாங்கத்தினதும் அதிஉந்நத நலன்களைக்கோரியே உழைத்துவருகின்ருர்கள். அவர்களின் கல்வித்தொண்டு ஒவ்வோர்நாட்டிற்குமே நிரந்தரமானநன்மையைச் செய்கின்றதென்பது எங்குமே ஒப்புக்கொள்ளப் பட்டதாகும். அதற்குக்காரணம், அவர்கள் தங்கள் சபையின் ஸ்தாபகரான அர்ச். டிலாசால் அருளப்பர் கொண்டிருந்த அதேலட்சியத்துடனும், அதேபற்றுதலுடனும் தங்கள்கடமையைத் திறம்பாது நிறைவேற்றிக்கொண்டு வருவதேயாம். அதனல் இந்தநூற்ருண்டுவிழாவானது கிறிஸ்தியன்பிறதர்மார் சபையிலே அதிகமானேர்சேர்ந்து, அதன் ஸ்தாபகரின் இருதயம் பூரிக்கச் சனசமூகத்துக்கு இன்னும் அதிகமான சேவைபுரியும்படியாக இலங்கைக் கத்தோலிக்க மக்கள் தேவானுக்கிரகத்தை இரந்துகொள்வார்களென்பதில் சந்தேகமில்லை.

### ஆவணித் திருநாள்

நமது ஆசனக்கோவிலிலே ஆவணித் திருநாளென அறியப்படுவதாகிய மாதாவின் மோட்சாரோபணத்திருநாள் வழமைபோல இம்மாதம் 15-ந் திகதி புதன்கிழமை கொண்டாடப்படும். அதற்கு முந்தியதிருவிழாக்கள் 1-ந்திகதியாகிய நேற்றைத்தினம் ஆரம்பமாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### குருப்பட்டாபிஷேகம்

நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் நிகழும் ஆவணி மாதம் 6-ந்திகதியாகிய வருகிற திங்கட்கிழமை காலை 7 மணிக்குக் குருவர்குழாமுடன் பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலுக்கெழுந்தருளி அங்கே வண. எட்றியன் யோசெவ் பிறதருக்குக் குருப்பட்டம் என்னும் திருப்பட்டம் அருளுவார். புதியகுருவர் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு அர்ச்.மார்த்தீனார்குருமடத்துச்சிற்றாலயத்திலே தமது முதற்திவ்வியபூசை நிறைவேற்றுவார். பின்னர் இம்மாதம் 12-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தமது ஜனனபதியாகிய அச்சுவேலி, அர்ச். சூசையப்பர் கோவிலில் முதன் முதலாகத் திவ்வியபூசை நிறைவேற்றுவார். குருப்பட்டாபிஷேகத்தின் போதும், பின்னர் அவரது முதற்பூசைகளின்போதும் சுற்றத்தவர்களும், அன்பர்களும் சமுகந்தந்து புதியகுருவருக்காகமன்றாடிக்கொள்ளுமாறு பரிவாகக்கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

### வின்சென்ற் டீ போல்சபை

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல்தருமசபைப்பந்திகளின் 1951-ம் ஆண்டிற்கான இரண்டாவது கால் வருடப் பொதுக்கூட்டம் சென்ற 29-7-51 ஞாயிறுவாரம் மாலை 5-30 மணிக்குச் சஞ்சூசையப்பர் கூட்டசாலையிலே தனிச்சங்க அக்கிராசனர் திரு. ஆர். ஜே. போல் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. நாலு பந்திகளையுஞ்சேர்ந்த 30 அங்கத்தவர்கள் சமுகமளித்தார்கள். திரு. எம். வி. ஆசீர்வாதம் இச்சபையின் அங்கத்தவர்களில் காணப்படவேண்டிய குணகுணங்கள் என்பதுபற்றி ஓர் ஞானவாசினை வாசித்தார். அதன்மேல் முறையே சஞ்சூசையப்பர், சந்தியோகுமையோர், சங்நீக்கிலார், உத்தரியமாதா பந்திகள் தத்தம் கால்வருட அறிக்கைகளையும்,கணக்குகளையும்சமர்ப்பித்தன. பின்னர் வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்கள் தருமசபைப்பந்திகளின் உந்ததோக்கங்களைப்பற்றியும், பந்தி அங்கத்தவர்களில் காணப்படவேண்டிய சுத்தகருத்துகளைப்பற்றியும் விபரமாக எடுத்துக்காட்டி அரியதோர் சொற்பொழிவாற்றினர். திரு. ஏ. எஸ். பிரான்சிஸ் ஒவ் மேரி அவர்கள் வண. உபந்நியாசகருக்கு நன்றியுரைகூறினர். அக்கிராசனர் குறிப்பின்பின் வழமையான செபத்துடன் கூட்டம் நிறைந்தது.

### வெற்றியும் பரிசும்

யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்க ஆதரவில் சென்றதிங்கட்கிழமை பிற்பகல் சென் ஜேம்ஸ் கலாசாலைமண்டபத்தில் தமிழ்ப்பாடசாலைகள் நடத்திய சங்கீதப்போட்டியிலே நாவாந்துறைக் கத்தோலிக்க பாடசாலை மாணவர்கள் மிகத்திறமையாக நடித்த "வீழ்ச்சி" என்னும் நாடகத்துக்கு முதற்பரிசாகக் கிண்ணமும், வெள்ளிக் கேடயமும் அளிக்கப்பட்டிருப்பதாக அறிந்து சந்தோஷமானோம்.

### தமிழ் டிப்புளோமா பரீட்சை

இலங்கைச் சர்வகலாசாலை இவ்வாண்டு நடத்திய தமிழ் டிப்புளோமா (வித்துவான்) இறுதிப்பரீட்சையில் செல்வி. பி. நாகலிங்கம், திரு. ஏ. சந்தியாப்பிள்ளை, திரு. என். எம். ஜே. வேதநாயகம் ஆகியவர்கள் தேர்ச்சி அடைந்திருக்கிறார்களென அறிந்து சந்தோஷமானோம் திருவாளர்கள்: சந்தியாப்பிள்ளை, வேதநாயகம் ஆகிய இருவரும் கொழும்புத்துறை, சஞ்சூசையப்பர் தாபனப் பழையமாணவர்கள்.

### திருமண வெள்ளியூபிலி

யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரரான சுவாமிகளின் கிளார்க்குவாகக் கடந்த 25 ஆண்டுகளாய்ச் சிறப்பாகக் கடமையாற்றி வந்து, ஆசிரியஉலகில் பலராலும் நன்கறியப் பெற்றவரான திரு. கே. கே. ஜுவக்கிம்பிள்ளை அவர்களும், அவர் பாரியாரும் தங்கள் திருமண 25-ம் வருட வெள்ளியூபிலிவிழாவைச் சந்தானுளின் திருநாளாகிய சென்ற 26-ந் திகதி வியாழக்கிழமை அமைதியாகக் கொண்டாடினார்கள். அன்று காலை அவர்கள் தமது சுற்றத்தவர்கள் சமேதராய் ஆசனக்கோவில்சென்று தேவதோத்திர திவ்வியபூசைகண்டு குரவோரின் ஆசியும், சோபனமும் பெற்றார்கள். பின்னர் அன்று பிற்பகல் அவர்கள் தம்இல்லத்தில் தமது உறவினருக்கும், அன்பர்களுக்கும் பரிமளிப்பாக நடத்திய இல்லுபசாரணையின்போது பலபிரமுகர்களும், ஆசிரியரும், ஏனையோரும் திரளாகச் சமுகமளித்து, மகிழ்வுடன் உபசரிக்கப்பெற்று, யூபிலிவிழாத் தம்பதிகளுக்குச் சோபனவாழ்த்துக் கூறி நின்றார்கள்.

### கல்லூரி விளையாட்டுப்போட்டி

சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி சென்ற 28-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் கல்லூரிப் புதியமைதானத்திலே வடமாகாண அரசாங்க ஏசன்றர் திரு. பி. ஓ. பெர்ணாண்டோ அவர்கள் தலைமையில் அதிபரிமளிப்பாக நடந்தேறியது. அத்தருணம் அநேக பிரமுகர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும், பழைய மாணவர்களும், பிறகல்லூரி ஆசிரியர் மாணவர்களும் பெருந்திரளாகச் சமுகமளித்து, அங்கு இடப் பெற்றிருந்த ஐந்துபந்தர்களிலும், மைதானத்தைச் சூழவர நாலாபுறங்களிலும் அமர்ந்து, மாணவர்களின் நான்கு கோஷ்டிகளுக்குமிடையே பெரும் ஆர்ப்பரிப்புகளுடன் உற்சாகமாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டியைக் கண்டுஆனந்தித்தார்கள். இடைவேளை ஓர் தோட்டோபசாரணை சிறப்பாக நடந்தேறியது. போட்டி முடிவிலே ஸ்ரீமதி பி. ஓ. பெர்ணாண்டோ அவர்கள் ஒவ்வோர் விளையாட்டிலும் முதல் மூன்றிடம்வகித்த மாணவர்களுக்கு நற்சாட்சிப்பத்திரங்களும், வெள்ளிப்பாத்திரங்களுமாகப் பரிசில்கள் வழங்கினர். ஈற்றில் கல்லூரித்தலைவர் சுவாமியவர்களால் மாகாண ஏசன்றருக்கும், அவர் பாரியாருக்கும், அங்கு சமுகமான ஏனையோருக்கும் நன்றித்துதி கூறப்பட்டுப் போட்டி இனிதே முடிவுற்றது.

### சுகாதார விழாப்போட்டி

சுகாதாரவார விழாவை முன்னிட்டுச் சாவகச்சேரிப்பகுதிப் பாடசாலைகள் நடத்திய சங்கீதவிழாப் போட்டியிலே அங்குள்ள கத்தோலிக்கபாடசாலை நடனத்தில் முதலிடம் வகித்துள்ளது. நடனத்தில் ஈடுபட்ட பிள்ளைகளின் திறமையைச் சாவகச்சேரிப் பிரதிநிதியாகிய திரு. வி. குமாரசாமி, எம். பி. அவர்கள் பெரிதும்பாராட்டி அப்பிள்ளைகளுக்குத்தாம் வெகுமதிகள் வழங்கப்போவதாகத் தெரிவித்திருக்கிறாரென அறிகின்றோம்.

### தேகாப்பியாச விளையாட்டு

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அறுபது கல்லூரிகள், கலாசாலைகளைச் சேர்ந்த பதினாயிரவருக்கு மேற்பட்ட மாணவர்கள், மாணவிகள் யாழ்ப்பாண முற்றவெளியிலே பொலிஸ்மைதானத்தில் சென்ற 26-ந்திகதி வியாழக்கிழமை சாயந்தரம் பெருங்கூட்டமாக ஒருங்கே கடத்திக்காட்டிய தேகப்பயிற்சி விளையாட்டைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுமகிழ்ந்தார்கள். பாடசாலைகளின் தேகப்பயிற்சித்தலைவரான திரு. ஏ. பி. சின்னக்கோன் அவர்களே முதன்மைவகித்து அதனை நடத்தினர். வடமாகாண அரசாங்கஏசன்றர் திரு. பி. ஓ. பெர்ணாண்டோ அவர்களின் ஆதரவிலே [illegible] அதிலே [illegible] மாணவ மாணவிகள் கலந்துகொள்ளப்பண்ணித் திறமையுடன் தேகாப்பியாசஞ் செய்து காண்பித்ததில் சம்பத்திரிசியார் கல்லூரியும், யாழ்ப்பாணம் திருக்குடும்பகன்னிகாமடத்து ஆங்கில கலாசாலையும் முறையே முதலாம், இரண்டாம் இடங்கள் வகித்திருப்பதாக அறிந்துசந்தோஷமானோம்.

### அரிசி, மா வரத்து

தற்சமையம் நமது அரசினரிடம் 1,70,000 தொன் அரிசி கையிருப்பாக இருந்துவருகிறது. நிகழும் ஆவணி மாசத்தில் 22,000 தொன் அரிசிவந்து சேரவிருக்கிறது. தற்போது மாதம் ஒன்றுக்கு இலங்கையிலே 35,000 தொன் அரிசி செலவாகிறது. ஆஸ்திரேலியாவிலிருந்து இம்மாதத்திலே 52,000 தொன் மாவுக்குமேல் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க ஐக்கியதேசத்துக்கும், கனடாவுக்கும் 15,000 தொன் மாவுக்கு நமது அரசினர் ஆடர் அனுப்பியிருக்கின்றனர்.

### மனைவியைக் கொலைசெய்தவர்

தனது மனைவியான பரமேஸ்வரியைச் சென்ற தைமாதம் 7-ந்திகதியன்றிரவு சுட்டுக்கொலை செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவரும், மூதூர்க் கிராமச்சங்க அங்கத்தவருமான கே. தம்பிராசா என்பவர் மட்டக்களப்புச் சுப்பிறீங்கோட்டிலே குற்றவாளியாகக்கண்டு சென்ற வெள்ளிக்கிழமை மாணதண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றார். இவர் தனதுமனைவியை விவாகரத்துச்செய்யுமாறு சென்ற ஐப்பசிமாதம் நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்குவிசாரணை சென்ற தைமாதம் 9-ந்திகதிக்குத் தவணையிடப்பட்டிருந்தது. அதற்கு இருதினங்களின்முன் பரமேஸ்வரி சுட்டுக்கொல்லப்பட்டாள்.

### வாழ்க்கைச் செலவுப்புள்ளிகள்

இலங்கையிலே சென்ற ஆடிமாசத்தில் வாழ்க்கைச் செலவுப்புள்ளிகள் 281. அதாவது முந்தியஆனிமாசத்திலும் மூன்று புள்ளிகளால் குறைந்திருக்கின்றன. மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாவுக்குமேல் சம்பளம் பெறுகிறவர்களை இந்தக் குறைவு பாதிக்க மாட்டாது. ஆனால், நூறு ரூபாவுக்குக்கீழ் சம்பளம் பெறுகிறவர்களின் பஞ்சப்படி இம்மாசத்திலே குறைவாயிருக்கும். வாழ்க்கைச்செலவுப் புள்ளிகளின்தொகை சென்ற ஆடியில் குறையக்காரணம், மீன், தேங்காய், ஆதியாம் உணவுப்பொருட்களின் விலை குறைந்தமையேயாம்.

### மக்களின் குடியரசுக்கட்சி

மகாஜனபெறமுனைக் கட்சியையும், ஸ்ரீலங்கா குடியரசுக்கட்சியையும் ஒன்றுசேர்த்து ஓர்புதியகட்சியை ஆக்குவதென்று ஹோறணையில் நடைபெற்ற முந்தியகட்சியின் விசேஷகூட்டம் ஒன்றில் தீர்மானமாயிருக்கிறது. அப்புதியகட்சி "மக்களின் குடியரசுக்கட்சி"யென அழைக்கப்படவிருக்கிறது. இது பாராளுமன்றத்திலுள்ள சில சுயேச்சை அங்கத்தவர்களைத் தன்னுடன்சேர்த்துக்கொள்ள அவாவுகின்றது.

### பாந்தன் குடியேற்றதிட்டம்

பாந்தன் குடியேற்றதிட்டத்தின்கீழ் புதிதாகக் காடுவெட்டித் துப்பரவுசெய்யப்படும் பகுதியில் குடியேற்றுதற்கென்று தெரியப்பட்டுள்ள குடும்பங்களுக்குப் பகிர்ந்துகொடுப்பதற்கென ஒவ்வொன்றும் இருஅறைகளையும், ஒரு அடுக்களையையுங்கொண்ட 125 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. ஒவ்வோர் குடும்பத்துக்கும் நான்கு ஏக்கர் நெற்காணியும், தோட்டச் செய்கைக்கென மூன்று ஏக்கர் மேட்டுக் காணியும் கொடுக்கப்படும்.


### திவ்வியபூசையின் மகத்துவம்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.

பிரதி விலை ரூபா 2-50


## பாடசாலைக்கோணம்

A. 12-7-51-இல் வெளியான வினுவிற்குப் பூரண திருப்தியான விடைகள் அனுப்பியவர்கள் ஒருவருமில்லை. கிட்டிய சரியான விடைகள் அனுப்பினோரின் முதல்ஐந்துநாமங்கள் பின்வருமாறு: (1) வி. அலெக்சான்டர், கொழும்புத்துறை. (2) செ. பவுலப்பு, கொழும்புத்துறை. (3) யூக்கறிஸ்ற்ரு சரோஜினி, மாவிலங்கேணி. (4) எஸ். மரியநாயகம், வதிரி. (5) அ. ரோஸ்மலர், பாப்பாமோட்டை.

B. விடையின் சுருக்கம்:

1. ஓர்வகையான ஞானஸ்நானமும் பெறாது மரிக்கும் புத்திவிபரமறியாப்பிள்ளைகள் மோட்சத்தையடைவதில்லை. நரகத்திலே தள்ளப்படுவதுமில்லை. நீதியும் இரக்கமுமுள்ளதேவனால் இவர்கள் தங்களுக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் லிம்போ என்னும் ஓர் ஸ்தலத்துக்குச் செல்வார்கள்.

2. இங்கேயோ, அவர்கள் யாதோர் துன்பமுமின்றி மனுஷ சுபாவத்திற்குரியனவும், மாசற்றனவுமான இன்பங்களைப் பூரணமாய்ச் சுகித்து, இவ்வுலகிலுள்ள எவரிலும் பார்க்கக் கூடியதான சந்தோஷங்களை அனுபவிப்பார்கள். மோட்சத்தை இழந்து போனோமேயென்ற துக்கம் அவர்களுக்கு இருக்கமாட்டாது. தேவனை முகமுகமாய்த் தரிசிக்க மாட்டார்களென்றது மெய். ஆனால், படைக்கப்பட்ட சிருஷ்டிகளில் அவரைக்கண்டு அதி பத்திவிசுவாசத்தோடு அவரை நேசிப்பதுடன், புண்ணியத்தில் நிலைநாட்டவும் பெற்றிருப்பார்கள்.

3. இவர்களுக்கும், மகிமைப்படுத்தப்பெற்ற சிருஷ்டிகளான மோட்சவாசிகளுக்குமிடையில் அன்னியோன்னியசகவாசம் உண்டென்று நம்ப இடமுண்டு. சுத்தவாளரிலே தேவனுடைய ஞானம், வல்லமை, சிநேகம் முதலியவற்றை இவர்கள் கண்டு மகிழ்வார்கள். தேவனின்வதனத்தைக் காணமுடியாமலிருப்பதற்கு இது ஒரு பதில் சம்பாவனைபோலிருக்கும்.

4. ஞானஸ்நானமின்றி மரித்த தங்கள் குழந்தைகளையிட்டு நம்பிக்கையற்றிருக்கும் பெற்றோரே! அவர்களையிட்டு அனுதாபப்படுவதிற் பயனில்லை. அனுபவிக்கக்கூடுமான, பாவமற்ற சுபாவஇன்பங்கள் யாவற்றையும் அவர்கள் அனுபவிக்கிறார்கள். யௌவன ரூபலாவர்ணத்துடனும், பழுதற்ற பூரண மனுஷகுணங்களுடனும், குறையற்ற ஆனந்தத்துடனும் உங்களை மறுவுலகிற்சந்திப்பார்கள். தேவனை நேர்முகமாய்க்காணும் பாக்கியத்தை உங்கள்பிழையால் இழந்துவிட்டார்களென்பதுமெய். ஆனால் அதையிட்டு அவர்களிடம் யாதோர்சிந்தையாவது, கவலையாவது இருக்கமாட்டாது. நடந்த பிழைக்கு அவர்கள்பேரால்லல, உங்கள்பேராலேயே உத்தரிப்புச்செய்யக் கடமையுள்ளவர்களாகிறீர்கள்.

C. பின்வரும் வினுவிற்கு 30-8-51-க்குமுன் **Rev. Fr. B. E. Alfred, O. M. I.**, Bishop's House என்ற விலாசத்திற்கு விடை அனுப்பவேண்டும்.

வினு: சிருஷ்டிகளுள் மனுஷன் வகிக்கும் இடத்தைப்பற்றி நீர் அறியும் விசேஷங்களென்ன?

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் திருக்குடும்பத்தினிடமும், அர்ச். அந்தோனியாரிடமும் கேட்ட மன்றாட்டுகள் அனுகூலமானபடியால் நேர்த்திப் பிரகாரம் இதைப்பிரசுரிக்கிறேன். இதனைக் காலதாமதம்பண்ணியதற்காக மன்னிப்புக்கோருகிறேன். J. M. J.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

### பலத்தை வளர்க்கும் வேலை

— டெட்ரோயிட்

அமெரிக்க கைத்தொழில்நகரமாகிய டெட்ரோயிட்டின் 250-வது பிறந்த நாட் கொண்டாட்டத்தின் போது, அமெரிக்க வெளிநாட்டுமந்திரி டீன் அச்சிஸன் நிகழ்த்திய பேருரையின் சாரம் வருமாறு: "இன்றைக்குச் சரியாக 250 ஆண்டுகளுக்குமுன் தற்போது டெட்ரோயிட்நகரம் இருந்து வரும்இடத்திற்குக் காடில்லாக் என்பவர் தமது 100 ஆட்களுடன் ஒரு கோட்டையைக்கட்டவந்தார். தீர்க்க திருஷ்டியுடன், என்றென்றும் நிலைத் திருக்கவும், மக்கள்வாழ்வில் ஒருமகத்தான முற்போக்குப்புரட்சியை விளைக்கவும்கூடியதான ஒன்றைச் செய்து முடிக்க வேண்டும்என்ற உள்ளத்துடிப்புடன் அவர் இந்தநகரை நிர்மாணித்தார். எதிர்காலத்தை நினைவிற்கொண்டு அவர்தொடங்கியபணி இன்று அவர் எதிர்பாராதஅளவிற்குக் கூடுதலாகவே பரிணமித்திருக்கிறது. அவரைப் போலவே நாமும் வருங்காலச்சிறப்புக்கு அடிகோலி ஆக்கவேலைகளில் ஈடுபட்டிருப்பவர்கள். நமது நோக்கும் எதிர்காலத்தை ஊடுருவிப்பாய்கிறது. பந்தோபஸ்தும், விடுதலையும், அபரிமித உற்பத்தியும் நிரம்பிய உலகை நிர்மாணிக்க நாம் பாடுபட்டுவருகிறோம். எதிலும் முன்கைஎடுத்து வேலைசெய்கிறவர்கள் எல்லாருக்கும் பந்தோபஸ்துத்தான் முதல்காரியமாகிறது. நாம் இப்போது பெருத்தஅபாயத்தில் இருக்கிறோம். இந்தஅபாயம் நம்மிற் சிலர் நினைப்பதற்குமாறாகச் சென்ற மாதத்தைக்காட்டிலும் இப்போது அதிகமாயிருக்கிறது.

"கோறியாப்பேச்சுக்களின் விளைவாகப் போர்நிறுத்தம் ஏற்பட்டாலுஞ் சரி, ஏற்படாவிட்டாலுஞ்சரி பலத்தை வளர்ப்பதுஎன்ற நமது வேலைத்திட்டம் மாறாது. சண்டைக்கிழக்கக் கம்யூனிஸ்தர்கள் துணிவுடன் தயாராகிவிட்டனர்என்பதைக் கோறியாமீது அவர்கள் தொடுத்ததாக்குதல் நமக்கு உணர்த்திற்று. அது நமது ஆயுதப் பெருக்கத்திட்டத்திற்கு உரமளித்தது. ஆனாலும், நமது பந்தோபஸ்துவளர்ச்சி ஏற்பாட்டுக்குக் கோறியா மட்டும் காரணமல்ல. அங்கு சமாதானம்ஏற்பட்டாலும்சரி, ஏற்படாவிட்டாலும்சரி நமதுஎதிரிகள் புறாக்கள்போலக் கூவினாலும்சரி, கரடிகள்போல உறுமினாலும்சரி நமதுவேலை மாறாது. நமக்குள்ள அபாயம் இன்னும்நீங்கவில்லை.

"சோவியற்ருஷியாவின் தந்திரங்கள் தருணத்திற்குத்தக்கபடி வளைந்து கொடுத்துக் கொள்ளுகிறவைகள். காலத்திற்குக்காலம் அவைகள்மாறும். எனவே, எந்தநாள்வரைக்கும் அதன் இராணுவபலம் பயமுறுத்தும்அளவிற்குப் பெருத்திருக்கிறதோ, எந்தநாள் வரைக்கும் அது சமாதானம்நிலைபெற்ற உலகைத்தோற்றுவிக்க ஒத்துழையாமல்போகிறதோ அந்தநாள்வரைக்கும் நமக்குள்ள அபாயம் நீங்கியதாகாது. அது எந்தத் தாலாட்டுப் பாடினாலும் அதைப்பொருட்படுத்தாது நமது வல்லமையை நாம் பெருக்கிக்கொண்டிருக்கவேண்டும். தேவைநேரிடின், அதன்பலாத்காரத்தைப் பலத்தைக் கொண்டு நாம்சமாளிப்போம். ஆனால், சண்டையானது சிக்கல்களைத் தீர்க்காது. சிக்கல்களைப் பெருக்கியேதீரும். பலவீனமேஎன்றால், சண்டையானாலுஞ்சரி, அது இல்லையென்றாலுஞ்சரி தோல்வியிற்தான் கொண்டுபோய்த் தள்ளும். ஆகையால் சண்டை, பலவீனம்இரண்டிற்கும் நடுவானவழியை, அதாவது சோவியற்விஸ்தரிப்பைச் சண்டையின்றித்தடுக்கக் கூட்டுப்பாதுகாப்பைப் பலப்படுத்தும்பாதையை நாம் தற்சமயம் பின்பற்றிவருகிறோம். இன்றுள்ளநிலைமையில், யுத்தநுணிச்சலைக் குறைப்பதற்கும், அடுத்த சில ஆண்டுகளுக்கு அபாயங்களினூடே சாக்கிரதையாகக் கடந்து செல்வதற்கும் முழுமுதல்கடமையாக அமைவது, சுதந்திரநாடுகளின் பலத்தைப் பெருக்குவதேயாகும்."

### கோறியாவை விட்டு அகலக்கூடாது

— வாஷிங்டன்

"கோறியாவில் போர்நிறுத்தம் ஏற்படும்பட்சத்தில், சமாதானம் சிரஞ்சீவியாயிருக்கும்என்ற நம்பிக்கை தரும் சூழ்நிலைகள்ஏற்படும்வரை ஐ. நா. படைகள் அங்கே தங்கியிருக்கவேண்டும். மறுபடியும் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பு மூளாதுஎன்ற உத்தரவாதம் கோறிய மக்களுக்குக் கிடைக்கவேண்டும். அப்படிப்பட்டநிலைமைகள் உருவாகும் வரை ஐ. நா. படைகள் கோறியாவில் தங்கியிருக்கவேண்டும். ஐ. நா. திட்டப்படி, முன்னொருமுறை கோறியாவிலிருந்து வெளிநாட்டுப்படைகள் வெளியேறின. ஆனால், பின்னிட்டு என்ன நடந்தது? கம்யூனிஸ்தர்கள் திடீர் ஆக்கிரமிப்புப்போரைக் கோறியாமீது தொடுத்தனர். இது மறுபடியும்நிகழ வழிவிடக்கூடாது." இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டுமந்திரி டீன் அச்சிஸன் விடுத்த ஓர்அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

### கம்யூனிஸ்தர்கள் தந்திரிகள்

— ஹமில்டன், நியூயோக்

"தருணத்திற்குத் தக்கவாறு தந்திரங்களை மாற்றிக்கொள்ளுகின்ற கம்யூனிஸ்தர்கள்விஷயத்தில் சர்வ சாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்று ஐ. நா. அமெரிக்க துணைப்பிரதிநிதி ஸ்தானிகர் எர்னஸ்ட் ஏ. கிரூஸ் இங்கு அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை பற்றிய மூன்றாவது வருடாந்த மகாநாடொன்றில் பேசுங்கால் எச்சரிக்கை விடுத்தார்.

சோவியற்நினைவுகளை அது செய்வதைக்கொண்டுதான் மதிக்கவேண்டுமே தவிர, அதுசொல்வதைக் கேட்டுஅல்ல என்ற படிப்பினையைச் சுதந்திரஉலகம் பெற்றிருக்கிறது. 'சேர்ந்துவாழ்வது' என்ற சொல்லடுக்கை இரும்புத்திரை நாடுகள் வீசிவருவதைக்கேட்கிறோம். அப்படியென்றால் என்ன? ஐ. நா. தர்மசாசனத்தில் கண்டுள்ள கோட்பாடுகளின் பிரகாரம்நடக்கச் சோவியற்அரசு தயாரா? அப்படிச்செய்ய அமெரிக்கா தயாராயிருக்கிறது. சேர்ந்துவாழ, தேசியத்தைமதிக்கச் சோவியற்அரசு தயாரா? அமெரிக்கா தயாராயிருக்கிறது. அதற்கு அத்தாட்சியும்உண்டு.

### ஸ்பெயின்பற்றிய பேச்சுகள்

— வாஷிங்டன்

சென்றவாரம் ஸ்பெயினில் அதிமுக்கியமான பேச்சுக்கள் நடைபெற்றன. அவற்றிலே, அமெரிக்காவின் கடற்படைத்தலைவர் ஷெர்மன் கலந்து கொண்டார். ஸ்பெயின்விஷயம் சிக்கலானது. பிரித்தானியும், பிரான்சும் "நமதுமனப்போக்கை ஏற்கவில்லை" என்பதைத் திரு. அச்சிஸன் பச்சையாகச்சொல்லுகிறார். ஆனால், மேற்கு ஐரோப்பாவின் பாதுகாப்புக்கு ஸ்பெயின் இன்றியமையாத கேந்திரஸ்தானம் என்பதைக்குறித்து இராணுவத் தலைவர்களுக்கு இரண்டுஅபிப்பிராயம் இல்லைஎன்பதையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். எனவே, அமெரிக்க தற்காப்புப்பகுதியின் யோசனையின் பேரில் ஸ்பெயின்விஷயமாக அமெரிக்காவின்கொள்கை [illegible] இதேமாதிரிச்சிக்கல் [illegible] யூகோசிலேவியாவுக்கு உதவிசெய்வதா? இல்லையா? என்று தீர்மானிக்கவேண்டி வந்தபோதும் ஏற்பட்டது. சோவியற்ருஷியாவுடன் யூகோசிலேவியா மோதிக்கொண்டது. இந்த நிலைமையில், மேற்குஐரோப்பிய பாதுகாப்புக்கு யூகோசிலேவியாவைப் பலப்படுத்துதலும் அவசியமாகியது. ஸ்பெயினுக்கு உதவிசெய்வதினால், மற்ற நாடுகளுக்குக் கிடைக்கும்உதவி சற்றும்குறைவுபடாதுஎன்பது அமெரிக்க அதிகாரிகளின் அபிப்பிராயம்.

### 23 ருஷிய அகதிகள்

— நியூயோக்

வடமேற்குச் சீன மாகாணமாகிய சிங்கியாங்கைக் கம்யூனிஸ்தர்கள் கைப்பற்றியபிறகு, மனிதவாழ்க்கை "சகிக்க முடியாதது" என்று கண்டுகொண்ட 23 வெள்ளைருஷியர்கள் இந்திய எல்லை நகரான கலிம்போங்குக்குத் தப்பிவந்துள்ளனர். இந்தஅகதிகள் பதினைந்து மாதகாலம் பிரயாணம்செய்து இந்திய எல்லையை எட்டியுள்ளனர். கம்யூனிஸ்தஇராச்சியத்தில் வாழ்க்கை சகிக்கமுடியாததாகிவிட்டதாகவும், அதைப பொறுத்துக்கொண்டு இருப்பதைக்காட்டிலும் சுதந்திரநாட்டில் மடிவதுமேல்என்று முடிவுகட்டியதாகவும் [illegible] தெரிவிக்கின்றனர். [illegible] அகதிகள்சகாய ஸ்தாபனத்தின் உதவியை நாடுகின்றனர்.

---

## அர்ச். டிலாசால் அருளப்பரும் கிறிஸ்தியன் சபையாரும்

## மன்னார் பெறவிருக்கும் மகத்தான பாக்கியம்

1951-ம் ஆண்டானது கத்தோலிக்க ஆசிரியர்மாணவர் உலகில் மகிழ்ச்சிக்குரிய ஓர்மகத்தான ஆண்டாகும். கல்வியுலகில் அரும்பெருந்தொண்டாற்றிவருகின்ற கிறிஸ்தியன்சபைவிறதர்மார்களும், அவர்களது மேற்பார்வையின்கீழுள்ள மாணவர்கள் ஆசிரியர்களும் அச்சபைஸ்தாபகரின் மூன்றாவது நூற்றாண்டு நிறைவுவிழாவை அக்களிப்புடன் கொண்டாடுகிறார்கள். இந்தச்சபை தனது ஸ்தாபகராகிய அர்ச். டிலாசால் அருளப்பரின் உந்நத லட்சியங்களுக்கிணங்க உலகம்முழுவதும் தொண்டாற்றிவருகின்றது.

சிறுவர்களது கல்வியின்மூலமே தேவனுடையஇராச்சியத்தை அதிகமாகப் பரப்பமுடியுமென உணர்ந்து அதற்காகத் தம்மாலானமட்டும் பிரயாசப்பட்ட ஓர்பெரியஅர்ச்சியசிஷ்டர் டிலாசால் அருளப்பர். விசேடமாக ஏழைச்சிறுவர்களே இவரதுஇதயத்தில் சிறந்தஇடத்தை வகித்தார்கள். கல்வியறிவின்மையால் ஏழைகளின் மத்தியில் வேதவிசுவாசம் அருகிக் கொண்டுவருவதையும், மற்றும்பணம் படைத்த சமூகத்தினரால் அவர்கள் ஒதுக்கித் தள்ளப்படுவதையும் கண்டபோது இவர் உளம்வருந்தினார். இப்போதுதான் இலங்கைஅரசாங்கம் இலவசக்கல்விமுறையை எமது நாட்டில் புகுத்தியுள்ளது. ஆனால், இற்றைக்கு 272 ஆண்டுகளுக்குமுன்னரே அர்ச். டிலாசால் இம்முறையை வகுத்துவிட்டார்.

ஏழைப்பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுவதிலே இவர்கொண்ட ஆர்வத்தினால் எத்துணைபெரும் இன்னல்களுக்குள்ளாகினார்என்பதை நினைக்கவும் முடியாது. தமது சொந்தச்சகோதரர்களாலேயே இவர் வெறுக்கப்பட்டாரெனில் ஏனையோர் இவரைஎங்ஙனம் மதித்திருப்பார்களென்று கூறவேண்டியதில்லை. பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி ஊட்டவேண்டுமானால் சிறந்த ஆசிரியர்களைத் தாம்உருவாக்கவேண்டுமெனச்சிந்தித்து அவர்களுக்குச்சிறந்த பயிற்சி அளிக்குமுகமாக, அந்தஏழை ஆசிரியர்களை—பிரான்சில் இருந்த செல்வவந்தர்களால் ஒதுக்கப்பட்ட அவர்களைத் தமதுஉறவினரும் பிறரும் தம்மைவெறுப்பரே என்பதையும் நோக்காது தம்முடையவீட்டிலேயே ஏற்று, அவர்களுக்குக் கல்வியூட்டுவதில் சிறந்தபயிற்சி அளித்துவந்தார். அதனால் முதன்முதல் ஆசிரிய பயிற்சிச்சாலையை நிறுவியவரும் இந்த அர்ச்சியசிஷ்டரேயாம்.

இவரதுபாடசாலைகளுக்கும், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பிரான்சில் பணம்வசூலிக்கும் பாடசாலைஅதிகாரிகளால் எவ்வளவோ இடையூறுகள் ஏற்பட்டும் அவைகளை எல்லாம் பொருட்படுத்தாது, தாமும் ஏழையாகவிரும்பித் தமதுசொத்துச் சுதந்தரங்கள் எல்லாவற்றையும் ஏழைப்பிள்ளைகளின் கல்விக்காகச் செலவிட்டார். ஏழைகள் மட்டில் இவர்செய்த சேவைகள் மட்டில் அழுக்காறுகொண்டோராலே அவர் நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டும் மனஞ்சோராது தேவபராமரிக்கையிலே நம்பிக்கைவைத்திருந்தார்.

ஏழை, பணக்காரன்என்ற வித்தியாசம் ஆழமாகப் பிரான்ஸ்தேசத்தில் வேரூன்றியிருந்த அக்காலத்திலே உயர்ந்தவம்சத்தில் பிறந்தஇவர் தன்னந்தனிமையாய் உழைத்தார். தேவ உதவியைக்கொண்டு வெற்றிபெற்றுத் தாம்தெரிந்துகொண்ட ஆசிரியர்களைக்கூட்டிக் கிறிஸ்தியன்பிறதர்மார் சபையை ஸ்தாபித்தார். இந்தச்சபையும் தனதுஸ்தாபகரைப் போலவே உலகமுழுவதிலும் கல்வித்தொண்டாற்றிவருகின்றது. அதனால் இலங்கையின்வடபாகத்திற்கும் இதுஎவ்வளவோ நன்மைசெய்யத்தக்கது. தன்னலமற்றதும், ஏழைகள்மட்டில் இரக்கசிந்தையுடையதும், உலகின இன்னல்களுக்கு அஞ்சாததும், ஏழைகளைப் போலவே தம்மையும்ஆக்கிக்கொண்ட ஒருஸ்தாபகராலே ஆக்கப்பட்டதுமான இச்சபை அவரைப்போலவே கடந்த 270 ஆண்டுகளிலும் சேவைசெய்துள்ளது. இப்படிப்பட்ட சேவை வடமாகாணத்திற்கும் கிடைக்கவிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆகவே, மன்னாரில் இச்சபையார் ஓர்ஸ்தாபனத்தை ஆரம்பிக்கப்போவது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். இலங்கையிலே கத்தோலிக்க திருச்சபைச்சரித்திரத்தில் ஓர்விசேஷித்த இடம்பெற்றதும், அறுநூற்றுக்கு மேற்பட்ட வேதசாட்சிகளின் இரத்தத்தினால் புனிதமாக்கப்பட்ட புண்ணியபூமியுமாகிய மன்னாரை இச்சபையார் தங்கள்ஸ்தாபனத்தின் ஆரம்பஸ்தாபனமாகத் தெரிந்துகொண்டமை தேவஅருளினால் ஏற்பட்டதென்றே சொல்லவேண்டும். குன்றாதவிசுவாசம் நிலைபெற்றிருக்கும் அந்தஇடத்திலே இச்சபையார் நிலைத்து வேரூன்றிச் சிறந்த தொண்டாற்றிவர அர்ச். டிலாசால் அருள்பாலிப்பாராக!

ஓர் ஆசிரியர்

---

### யாழ்ப்பாணக் கிருஷிக பாடசாலைக் கமக்காரப் பிள்ளைகளின்

## ஒருவருடப் பயிற்சி

மேற்கூறிய பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தங்களுடைய விண்ணப்பப்பத்திரங்களை 1951-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 15-ந் திகதிக்குமுன்பதாக யாழ்ப்பாணக் கிருஷிகப் பாடசாலை அதிபருக்கு அனுப்பவேண்டும். மேற்கூறிய விணணப்பம்செய்வோர் 17 வயதிற்கு மேற்பட்டவராயும் 22 வயதிற்குட்பட்டவராயும் வடமாகாணத்தவராயும் தமிழில் எழுத வாசிக்கத்தெரிந்தவராயும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்தையும் வேறு உங்களுக்குத்தேவையான விஷயங்களையும் மேற்படி பாடசாலை அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

R. D. கதிர்காமர்,
அதிபர்
கிருஷிகப் பாடசாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தூது

தமிழ்இலக்கியக் கழகத்தலைவர் அறிஞர் தனிநாயகஅடிகள், *M. A., M. Litt., S. T. D*

(முன்தொடர்ச்சி)

தோக்கியோப்பேரூரில் 'மாரூசென்' என்பது ஒருபுத்தகவிற்பனைக்கடை. அங்குப்புதுநூல்களையும் பழையநூல்களையும் விலைக்குப்பெறலாம். அவர்களுடையபழையநூல் விற்பனைநிலையத்திற்குச் சென்றக்கால் போப் ஐயருடைய பலநூல்களையும், தீட்சிதரின் சிலப்பதிகார மொழிபெயர்ப்பையுங் கண்டேன்.

செய்தித்தாள்களுக்கு ஜப்பானிய நாட்டில் மிக்குயர்ந்தவளம். மைனிச்சி, அஸாஹி எனும் செய்தித்தாள்கள் ஒவ்வொன்றும் முப்பதுநூறாயிரம் படிகளுக்குமேல் நாள்தோறும் செலவாகின்றன. இவற்றின் ஆசிரியர்கள் என்னைத் தம்செய்தித்தாள்கள்வழியாய் ஜப்பானியமக்களுக்கு நற்சொற்கள்சில கூறுமாறுவேண்டினர். அப்பொழுது "மேற்றிசை கீழ்த்திசைவேற்றுமைகள்ஒழிந்து, உலகமாந்தர் தமிழ்ப்புலவரின் 'யாதும்ஊரே, யாவருங்கேளிர்'எனும் பரந்த 'ஒன்றேஉலகம்'எனும் மனப்பான்மையை வளர்க்கவேண்டு"மென்றுங்கூறினேன். இனி, இவ்வாறே உலகின்வேறுபல இடங்களிலும் என்நற்சொல்லையும் கையெழுத்தையும் (Autograph) விரும்பியவர்க்கும், விருந்தினரின் நூல்களிலும் (Visitors book) சங்கப்புலவரின் இவ்வழகியஅடியினைத் தமிழ்எழுத்தில்பொறித்து, ஒத்தமொழிபெயர்ப்பையும் கேட்பார்மொழியில் வரைந்தனன். ஆங்கிலத்திலும், ஸ்பானியமொழியிலும் இனிதெனஒலித்தன அச்சொற்கள்.

"Every Country is my Country
Every man is my kinsman."
"Todos los pais son mi pais
Todos los hombres son mis hermanos."

பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழைப்பற்றிய ஆங்கிலநூல்களின் இன்மையையறிந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் என் வேண்டுகோளுக்கு இசைந்து ஜப்பானிய பல்கலைக்கழகங்களுக்குப் பலநூல்களை நன்கொடையாக அளித்தார். இவ்வாறு நன்கொடையாக நூல்களை உலகெங்கும்அனுப்பித் தமிழின்உரிமைகளை நிலைநாட்டவும்கூடும்.

யான்தமிழ்நாட்டைவிட்டு தோக்கியோவை அடைந்து இரண்டுகிழமைகளாயினபின் நண்பரொருவர் என்னை விருந்துக்கு அழைத்தார். அவ்விருந்தில் எனக்குப்பெருமகிழ்வூட்ட எண்ணி ஜப்பானிய உணவை வழங்காது தமிழ் உணவாகிய சோறும் கறியும் வழங்கினார். உண்ணும்பொழுது அவர் தன் வானொலிப்பெட்டியை அணுகி அதனை இயக்கினார். உடனே புதுடில்லியிலிருந்து தமிழ்ப்பாட்டுக் கேட்டது. இவ்வளவு தொலைவிலும் நாவுக்கும் செவிக்கும் தமிழ்விருந்து கிடைத்ததே என எண்ணி மகிழ்ந்தேன். ஆயினும் புதுடில்லியிலிருந்துவந்த தமிழ்ச்செய்தியும், இசையும் வடமொழி ஒலியுடையதாகவே இருந்தன. தமிழில் இல்லாத ஒலிகளையும், தேற்றங்களையும் இந்தியவானொலி நிலையத்திலிருந்து இடைவிடாது பரப்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழ்ஒலிபரப்பு தமிழ் ஒலியுடையதாகவே அமையுமாறு தமிழர் கடைப்பிடியாய் நிற்றல் நலமாகும்.

ஜப்பானியமொழி திராவிடமொழிகளுடன் தொடர்புடைய மொழியன்று. ஆயினும், தமிழைப்போல் ஒட்டுநிலை வகுப்பினைச் சார்ந்தது. ஜப்பானிய செய்யுட்களில் இறைச்சிபோன்ற சிலபண்புகள் உள. நம்சங்க இலக்கிய அகப்பாடல்களின் உரையாசிரியர் அப்பாடல்களுக்குக் கொளுஎழுதியிருப்பதுபோல ஜப்பானியப் பாடல்களுக்கும் அந்நாட்டுப் புலவர் கொளு எழுதியுள்ளனர். சிறப்பாக, ஜப்பானிய இலக்கியத்தில் 'தங்கா' எனப்படும் செய்யுள் முப்பத்தோர் அசைகளைப் பேரெல்லையாகக்கொண்டு நம் குறுந்தொகைச் செய்யுட்களைப்போல் கருத்திலும் கொளுவிலும் விளங்குகின்றது.

ஜப்பானியர் இயற்கையின் எழிலில் பெரிதும் ஈடுபட்டு வளர்பவர். மலர்களைச் செப்பில் ஒழுங்குபடுத்தி வைப்பதில் அவர்கள் தம் பெண்மணிகளுக்குச் சிறப்பான பயிற்சி அளித்துவருகின்றனர். ஆயினும், ஹாவாய்த்தீவுகளில் மலர்களையும் மாலைகளையும் இன்னும் பெரிதாய்ப் பேணுகின்றனர். ஹாவாய்த் தீவுகளுக்கு யான் சென்றபொழுது சங்கஇலக்கிய காலத்தின் நினைவு என்னைஅறியாமலே எனக்குத் தோன்றிற்று. ஏனெனில், அங்குத் துறைமுகத்திற்குவந்த மக்களனைவரும் கண்ணியும், மாலையும், தாரும், கோதையும் அணிந்தே வந்தனர். விருந்தாக வந்தவர்க்கு மாலைகளைச் சூடினர். வழியனுப்புவோர்க்கும் மாலைகளைச் சூடி விடைபெற்றனர், பாடினர். 'அலோஹா' எனும் ஹாவாய் இசையினைப் பண்ணுடன் இசைத்தனர். சிலர் தழையுடைகளை அணிந்து வந்திருந்தனர். இப்பெண்டிரும், ஆடவரும் சங்ககாலத் தமிழ்மக்களைப்போல் எனக்குத் தோன்றினர் என்பதில் சிறிதேனும் உயர்வுநவிற்சியின்று.

ஹாவாய்த் தீவில் விண்ணும் மண்ணும் எழில் படைத்திருக்கின்றன. தெளிவான நீலவானம். நிலத்தைச் சூழ்ந்த பசுமையானஒலி, கடல்நீர், பறவைகள், பூக்கள், மரஞ்செடிகள் இவை யாவும் யான்கண்ட வேறுஊர்களில் இல்லாநிறத்தையும், மணத்தையும் படைத்தனவாய் இருந்தன. என் உலகச்செலவில் யான் கண்ட நாடுகளில் ஹாவாய்த் தீவுகளே எழிலிற் சிறந்தவை. இங்குள்ள வெப்ப தட்பநிலைகள் அஞ்சத்தக்கனவல்ல. என்றும் உடல்நலத்துக்கு உறுதுணையானவையே.

பசிபிக் பெருங்கடலின் நடுவிலிருக்கும் இத்தீவுகள் கீழ்த்திசை நாடுகளையும் மேற்றிசை நாடுகளையும் இணைக்கும் பாலமாய் விளங்குகின்றன. ஹாவாய்த்தீவில் யான் தங்கியபோது அங்குக் கீழ்த்திசை மேற்றிசைத் தத்துவப்பேரறிஞர் மாநாடு நிகழ்ந்தது. இத்தகைய பேரவையைக் கூட்டுவதற்கு இதைவிடப் பொருத்தமான இடத்தைத் தெரிந்தெடுப்பதுஅரிது. ஹாவாய்த் தீவுகளிலும், பொதுவாகப் பசிபிக் பெருங்கடலின் தீவுகளிலும் நம் சங்ககாலப் பழக்க வழக்கங்களிற் சில இடம்பெறுவதாகத் தோன்றுகின்றன. மலர்களை அகவொழுக்கத்திற்கும் புறவொழுக்கத்திற்கும் அறிகுறிகளாகக் கையாண்டு வருகின்றனர். அந்நாட்டவர் முற்காலத்தில் பெரும்பாலும் இந்தியநாடுகளுடன் தொடர்புடையவராகவேஇருந்திருப்பர்போலும். இவர்களின் வரலாற்றை மேலும் அறிய விரும்புபவர் ஆசிரியர் பீற்றர் பக் (Peter Buck) என்பவர் எழுதிய "**Vikings of the Sunrise**" என்னும் நூலைப் படித்து அறிக.

ஹாவாய்த்தீவில் வாட்டுமல் எனும் இந்தியவணிகர் என்னை விருந்துக்கு அழைத்திருந்தார். அவர் சிந்துமாகாணத்திலுள்ள ஹைதராபாத் எனும் ஊரவர். ஹாவாயில் பெரும் செல்வம் படைத்த வணிகராகவிளங்குகின்றனர். அவர் அமெரிக்கப் பெண்மணியை மணம்செய்துள்ளார். இம்மணத்தால் நிகழ்ந்த இந்திய-அமெரிக்க உறவின பயனாக இவரிருவரும் தம்செல்வத்தின் ஒரு பகுதியை முதற்பணமாக நிறுவி, இந்தியாவில் அமெரிக்கக் கலைகளைப்பற்றியும், அமெரிக்காவில் இந்தியக் கலைகளைப்பற்றியும் ஆசிரியர் வழியாக அறிவுபரப்பி வருகின்றனர். இத்தொண்டிற்கு அவர் ஒதுக்கிய முதல் பதினைந்து நூறாயிரம் வெண்பொற்காசுகள் (15 லட்சம் ரூபாய்) இவ்வாறு தமிழ்ச் செல்வரனைவரும் முதல் திரட்டித் தமிழ்த்தூது நிகழ்த்துவாராயின் நம்கலைகள் பாரெங்கும் பரவுவதற்கு [illegible].

(தொடரும்)

## அர்ச் அன்னம்மாள் திருநாள்

பாண்டியந்தாழ்விலே அர்ச். அன்னம்மாள்திருநாள் சென்ற 26-7-51 வியாழக்கிழமை என்றுமில்லாத பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. பலவர்ணத்துவசங்கள், அழகிய மலர்கள், மின்சார தீபங்களாலே கோவிலும், அதன்முன்றிலும் அலங்கரிக்கப்பெற்றிருக்கத் திருவிழாக்கள் 15-ந் திகதி ஞாயிறுவாரம் ஆரம்பமாகி நடைபெற்றுவந்தன. 25-ந் திகதி மாலை 7-30 மணிக்கு வண. ஏ. இராசகாரியர், வண. பி. நீக்கிலாஸ் எனும் குருவர்கள் துணைபுரிய வண. கட்டளைக் குரவர் வேஸ்பர்பாடிச் சற்பிரசாத ஆசீர்வாதமும், திருச்சுரூபஆசீர்வாதமும் ஈந்தனர். ஆசீர்வாதத்தின்முன் வண. பி. நீக்கிலாஸ் சுவாமியவர்கள் அர்ச். அன்னம்மாளின் தேவதிருவுளத்துக்கமைந்த சீவியத்தைப்பற்றியும், பெற்றோர் பிள்ளைகளின் கடமைகளைப்பற்றியும் அரியதோர் பிரசங்கம் செய்தனர். திருநாளன்றுகாலை வண. கட்டளைக்குரவரால் பாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் 4-30 மணிக்கு யாழ்ப்பாணநகரின் பலவிடங்களிலிருந்தும வந்துகூடிய பக்தர்களும் சமுகமாக, வண. ஏ. இராசகாரியர், வண. பி. நீக்கிலாஸ் குரவர்கள்இருவரும்துணைபுரிய, வண. கட்டளைக்குரவரால் வேஸ்பர்பாடிமுடிந்ததும், சிறுவர், பெண்மணிகள், ஆடவர்கள் முறையே இருநிரையாகச் செபமாலை ஓதிவர, பாடகர்குழாம் கீதாஞ்சலி செய்துவர, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்நடந்து கோவில்முன்றிலையடைந்ததும், அங்கே திருச்சுரூபத்தை எழுந்தருளச்செய்து சகலரும் சந்தாணாள் நாயகியின் அடைக்கலத்தில் ஒப்புக்கொடுக்கப்பெற்றார்கள். அதன்மேல் வண. கட்டளைக்குரவரால் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்று, விருந்துடனும், மறுநாள் பாடற்பூசையுடனும் திருநாள் இனிதே நிறைவெய்தியது.

— **S. P.** நாதன்

## தபச் சுற்றுப்பிரகாரம்

ஊர்காவற்றுறை,கம்பன், நாரந்தனை முதலிய இடங்களிலுள்ள ஐயாயிரம் கத்தோலிக்கமக்கள் சென்றசனிக்கிழமைபிற்பகல் 5மணியளவில் சின்னமடுத்திருப்பதிக்கு ஓர்விசேஷ யாத்திரை செய்தனர். இதில்பங்குபற்றிய யாபேரும் தபத்தின்அடையாளமாய் வெள்ளையுடைஅணிந்து, கைகளில்செபமாலையும், சிலுவையும் ஏந்திச்சென்றது இங்கு குறிப்பிடத்தக்கது. பாடுபட்ட திருச்சிலுவையொன்று சுற்றுப்பிரகாரத்தின் பின்னணியில் கொண்டு செல்லப்பட்டது. சுற்றுப்பிரகாரம் சின்னமடுவாயிலை அடைந்ததும்'பிழைதீர்ப்பு' மந்திரம் பாடப்பட்டது. 15 நிமிஷங்கள் இளைப்பாறியதும் மாலை ஆராதனைகள் ஆரம்பமாயின. செபமாலை, திருச்சிலுவைப்பாதை, திருமணித்தியாலம் இவைமுறையே: வண. A. S. சிங்காராயர், வண. T. A. J. மதுரநாயகம், வண. M. S. நல்லையா சுவாமிகளால் நடாத்தப்பட்டன. திருமணித்தியாலநேரத்தில் மழைக்காக விசேஷசெபங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. சற்பிரசாதஆசீர்வாதம் முடிந்ததும் சுரூபஎழுந்தேற்றம்நடைபெற்றது.

S. L.

## முன்னேற்றசங்கம்

பாப்பாமோட்டையிலே இற்றைக்கு இருவருடங்களின்முன் மன்னார் உதவி ஏசன்றாயிருந்த திரு. ஆர். எல். ஆர்னோல்தா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்றுவந்த முன்னேற்றசங்கமானது சிலகாலமாகத் தேய்பிறையைப்போன்று அருகிவந்து இருந்தஇடமுந்தெரியாமல் மறைந்துபோகும் தறுவாயிலிருந்தது. இவ்விதநிலைமையிலே இருந்தசங்கத்துக்கு வண. S. வேந்தர்கோன் சுவாமிகள் புத்துயிர்அளித்து சென்ற 22-ந்திகதி பாப்பாமோட்டைப் பாடசாலையிலே பொதுக்கூட்டமொன்றைமிகவிமரிசையாக நடத்தியும், உணர்ச்சிததும்பப் பேசியும் யாவர்க்கும் உற்சாகம்பிறப்பித்தமை போற்றற்பாலதாகும். அப்போதுஅவர்பேசியவிடத்து: சாதிசமய பேதம்பாராது எல்லோரும் ஒத்துழையுங்கள்; அப்போது அரசினரிடமிருந்து ஏராளமான சகாயங்களைப் பெறமுடியும்; இன்னும்உங்களுக்கென்று சித்தஞ்செய்யப்பட்டிருக்கும் றேடியோக்கருவியைத் தப்பாது ஸ்தாபியுங்கள்; இன்னும் உங்கள்சங்கத்தின் ஆணிவேர்போன்று இருந்துவருமஉங்கள்தலைமைஆசிரியர் S. அந்தோனிப்பிள்ளை அவர்களின் அயராமுயற்சிகொண்டு ஒத்துழையுங்கள்; அவர் உங்கள்கிராமத்துக்குச் செய்ததும், செய்துவருவதுமான நன்முயற்சிகளை நான் நன்கறிவேன்என்று கூறினின்றார்.

— நிருபர்

## ஜேர்மனியின் புத்தெழுச்சி

"சோவியற்அரசின் போராசையை எதிர்த்து மேற்குஐரோப்பாவைப் பாதுகாப்பதிலே ஜேர்மனி ஊக்கமாகக் கலந்து செயலாற்றவேண்டும்; தான் இழந்துபோன கிழக்குநாடுகளையும், கிழக்கு ஜேர்மனியையும் திரும்பக் கொடுத்துவிடுமாறு சோவியற்அரசை உடன்படுத்தும்பொருட்டுக் கலந்து பேசத்தக்கதாய்த் "திரும்பவும் அது போதிய பலமுடையதாக" வேண்டு மென்று மேற்குஜேர்மனியின் சமஷ்டி அரசாங்க சான்சலரான டக்றர் கொன்றாட் அடினேவர் சென்ற 26-ந் திகதி எசென் நகரில் கூறியிருக்கின்றார். கிறீஸ்த ஜனநாயககட்சியின் தலைவரான இவர் அச்கட்சியைச் சேர்ந்த 3,000 பேர்கூடிய சமூகத்தில் பேசியபோது, "ஜேர்மனி திரும்பவும் ஆயுதபாணியாக வேண்டு"மென்று பலமாக வேண்டுகோள்விடுத்தனர். பன்னிரு படைவகுப்புகளாக அணிவகுக்கப்பெற்ற 2,50,000 போர்வீரர்களைக் கொண்டிருக்க மேற்கு ஜேர்மன் சமஷ்டிஅரசாங்கம் ஆலோசித்திருப்பதாக அன்றுதானே அவர் உத்தியோகபூர்வமாக முதன்முறையாய் வெளியிட்டனர். அமெரிக்க, பிரித்தானிய, பிரான்சிய அரசுகள் ஜேர்மனியுடன் இருந்துவந்த யுத்தநிலைமையை முடிவுக்குக் கொண்டுவந்தமையே இதற்குக் காரணமாகும்.

—பரிசுத்தபாப்பரசர் றோமாபுரியிலிருந்து சுமார்பன்னிருமைல் தூரத்திலே அல்பான்குன்றுகளில் அமைந்துள்ள காஸ்றெல்காண்டல்போவிலிருக்கும் தமது வேனிற்காலமாளிகை சென்றிருக்கின்றார். அங்கேஅவர் வருகிற புரட்டாசிமாதஇறுதிவரையில் தங்கியிருப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. வருகிற ஆவணிமாதம் 13-ந்திகதிமுதல் அவர்மூன்றுவாரகாலத்துக்குப் பேட்டிகளையெல்லாம் அங்கேநிறுத்திக்கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 484. Eng.

## நத்தைகளும் நுளம்புகளும்

வெளிப்பார்வையிலே ஒருவர் சமுசயிக்கக்கூடியதைக்காட்டிலும் யுத்தமானது தனதுபோக்கிலே அதிகமான பீடையைப் பலமுறையிலும் கொண்டுவருகிறதென்பது அமெரிக்கஐக்கிய தேசத்தில் மற்றுமோர்தரம் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டப்படுகிறது. அங்கே ஓர்தோடயபழத்தைப்போல் ஏறக்குறையப்பெரியதும, அரைமுத்தல நிறையுடையதுமான இராட்சத நத்தைகளின் கொள்ளைநோய்ஒன்றுல் விவசாயமுயற்சி அச்சுறுத்தப்படுகிறது.

தீமைக்கேதுவான அத்துணைஅநேகம் சீவபிராணிகளைப்போல இந்த நத்தைகளும் வழமைக்குமாமுணவகையிலே பெருந்தொகையான ஓர்சந்ததியைக் கொண்டிருக்கிறது. ஐந்துவருடங்களின்பின் இந்தஇராட்சதநத்தைகளில் ஒருசோடு ஒருகோடியே பத்துலட்சம் சந்ததிநத்தைகளைக் கொண்டிருக்கிறது.

தாங்கள்செல்லும்பாதையில் சந்திக்கும் தாவரப்பயிர்களையெல்லாம் பட்சித்துவிடுவதாலே இந்த நத்தைகள் அத்துணை அதிகமாகஉண்டுபண்ணுஞ் சேதம் மிகமோசமானது. இந்தநத்தைகள் ஆசியாவிலிருந்து அங்கு போயின. இரண்டாவது உலகயுத்தமமுடிந்தபின் போர்வீரர்களைத் திரும்ப ஏற்றிச்சென்ற கப்பல்களிலே அங்கு இவைகள் கொண்டுபோகப்படலாயின. அத்துணை கடுமையான சேதத்தை விவசாயத்துக்கு யுத்தம்உண்டுபண்ணியது, இதுதான் முதன்முறையன்று. யுகக்கணக்கான காலத்துக்கு முன்னருமே இதேகாரியம் அதிகம்மோசமானகரையில் சம்பவித்தது.

ஆசியாவிலிருந்து திரும்பவும் சுயநாட்டுக்குத் தருவிக்கப்பெற்ற போர் வீரர்களாலே புராதன கிரேக்கநாடு மலேரியாவால் அதேவகையில் பற்றுவிக்கப்படலாயிற்று. அதன்விளைவாய் விவசாயவிளைவு வெகுவாகக் குன்றியது. ஏனெனில், விவசாயத்தொழிலாளிகள் மலேரியாச்சுரங்களினுல் சோர்வடைந்தவர்களாய் நாளாந்த வேலையைச் சரிவரநன்முய்ச் செய்ய முடியாமற்போனுர்கள்.

இன்றைக்குமேஅயனுந்த—உபஅயனுந்தநாடுகளில் ஏறக்குறையயாவுமே மலேரியாவால் பாழாக்கப்படுகின்றன. இது லட்சக்கணக்கான மக்களுக்குச் சொல்லமுடியாத உபாதையைத் தருகிறதென்ற அர்த்தந்தரும் உண்மையைத்தவிர, அதேசமயத்திற்தானே கணக்கற்ற பொருளாதாரநஷ்டங்களையும் உண்டுபண்ணுகிறது.

இந்தநியாயத்தை முன்னிட்டுத் தான் குயினைனிலே அத்துணைசித்திகரமான ஓர் மருந்து கண்டுபிடிக்கப் பட்டிருப்பது அவ்வளவுபெரும் முக்கியத்துவமுடையதாய் இருக்கிறது. முந்திய சர்வதேசசங்கத்து மலேரியா நிபுணர்களின் கம்மிற்றியானது 1938-ம்ஆண்டு வெளியிட்ட ஓர்அறிக்கையிலே ஓர்கால்மலேரியா காணுமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குப் 15முதல் 20 கிறெய்ன் குயினைனும், மலேரியாபற்றிப்பரவுமென அஞ்சப்படும் காலமுழுவதும் தினமும் ஆறு கிறெய்ன் குயினைனும் பாவித்துவர வேண்டுமென ஆலோசனை கூறியிருக்கின்றது. இன்றைக்குமே இந்தச் சிபாரிசுகள் எங்கெங்குமே பெரிதும் அனுகூலத்துடன் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் திருக்குடும்பத்தினிடமும், அர்ச். அந்தோனியாரிடமும்கேட்ட மன்றாட்டுகள் அனுகூலமானபடியால் நேர்த்திப் பிரகாரம் இதைப்பிரசுரிக்கிறேன். இதனைக் காலதாமதம்பண்ணியதற்காக மன்னிப்புக் கோருகிறேன்.

J. M. J.

## வரவேற்புவிழா

### பாஷையூர்

பாஷையூர், அர்ச். அந்தோனியார் கோவில் கட்டளைக்குரவராய் இருந்துவருகின்ற வண. நீக்கலஸ்சுவாமியவர்கள் யாழ்ப்பாணப்பகுதி மூப்புச்சுவாமியாராக நியமனம்பெற்றிருப்பதைக் கௌரவிக்குமுகமாக இவ்வூர்க் கல்லாசாலையிலே சம்பத்திரிசியார் கல்லூரியைச்சேர்ந்த மாணவர்களால் சென்ற 30-ந் தேதி திங்கட்கிழமைமாலை அவருக்குச்சிறந்ததோர் வரவேற்புஅருளப்படலாயிற்று. அத்தருணம்சுவாமியவர்கள் மலர்மாலை சூடப்பெற்று, உயர் மேடையில் ஆசனம்வகித்ததும் திரு. பி. ஜி. மில்ஷனுல் அவருக்கு ஓர்உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து திரு. பி. பிலிப் என்பவரால் அவரது அருஞ் சேவைகளைப்பாராட்டி ஓர்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. சுவாமியவர்கள்எழுந்து தம்மைக் கௌரவித்த மாணவர்கட்கு நன்றித்துதிசாற்றிப் பேசியபோது: குருமாரைக் கௌரவிப்பது கடவுளையே கௌரவிப்பது போலாகுமென்றும், மாணவர்களிடையே என்றைக்கும்ஒற்றுமை நிலவிவரவேண்டுமென்றும், தமதுபுதியபதவிக்குரிய கடமைகளைச் சரிவர நடத்தும்படி தமக்காகமன்றாடிவரவேண்டுமென்றும் கூறிநின்றுர். பின்னர் ஓர்தோட்டோசபசாரணை நடந்து, அதன்முடிவில் திரு. ஜி. எஸ். தாசன்என்பவர் மாணவர்களின் ஒற்றுமையைப்பற்றிப்பேசியதும், திரு. பி. ஜி. மில்ஷன் கூறிய நன்றியுரையுடன் விழாமுடிபெய்திற்று. —நிருபர்

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction } No. 1323

In the matter of the Last Will and Testament of the late Sinnakuddy, widow of Kasinather Murugesu of Karainagar West, Karainagar

Deceased

Murugesu Sangarapillai of Karainagar West, Karainagar
Attorney of Murugesu Thambiah of Karainagar West
Karainagar, presently of Kuala Pilah. Malaya.

Petitioner

This matter coming on for disposal before V. S, Jayawickreme, Esquire, District Judge of Jaffna, on the 4-th day of June, 1951, in the presence of Mr. V. K. Rudrasingham, Proctor, on the part of the Petitioner abovenamed and the affidavit of the Petitioner abovenamed dated the 4th day of June, 1951, the affidavit of the attesting witnesses dated the 23rd day of May, 1951, and the affidavit of the Notary dated the 29th day of May, 1951, having been read:

It is ordered that the Last Will and Testament No. 514 made by the deceased abovenamed and attested by Mr. S. Candiah, Notary Public on the 17th day of December, 1948, the original of which has been produced and now deposited in this Court be and the same is hereby declared proved; and that Murugesu Thambiah of Karainagar West, Karainagar, presently of Kuala Pilah, Malaya, is the Executor named therein and the Petitioner abovenamed is hereby declared entitled as the duly appointed Attorney of the Executor to have Letters of Administration with the Will annexed issued to him accordingly, unless any other person or persons interested shall, on or before the 16th day of July, 1951, show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 25th day of June, 1951.

(Sgd.) V. S. JAYAWICKREME,
District Judge.

Extended and re-issued for showing cause till September 10, 1951.

(Sgd.) V. S. JAYAWICKREME,
District Judge.

## பொது வர்த்தமானம்

### அமெரிக்க ஆகாயப்பலம்

ஜேர்மனியிலுள்ள அமெரிக்க பன்னிரண்டாவது ஆகாயப்படையைப் புதுவிமானங்கள்கொண்டு பலப்படுத்துமாறு அமெரிக்க ஐக்கியதேசத்தில் இருந்து சென்ற ஞாயிற்றுக்கிழமை முதல் பெருந்தொகையான யுத்த விமானங்கள் ஆங்குள்ள றைன்நாட்டுப் பெரியஆகாயவிமான தளத்தில் போய்ச் சரிந்துகொண்டிருக்கின்றன. இவற்றிலே சி-119 எனும்விமானங்கள்இரட்டைஎஞ்சின் பூட்டியவைகள். பழுவற்றனவும்,நடுத்தரமுமான தாங்கிகள், றக்குகள், லொறிகள், அல்லது பூரணஆயுதபாணிகளான 64 போர்வீரர்களை ஏற்றிச் செல்லத்தக்கவைகள். 8சி-119 எனப்படுவன யுத்தசாமான்கள் ஏற்றியிறக்கும் விமானங்களாகும். மேற்குஜேர்மன் சமஷ்டி அரசாங்கமும் ருஷியாவின் தாக்குதலிலிருந்து தனனைப்பாதுகாத்துக் கொள்ளுமாறு ஆயுதபாணியாக ஆயத்தப்படுகின்ற இந்தவேளை அமெரிக்கவாசும் அங்கு பலங்கொள்வது ருஷியாவுக்குப் பெரிய ஏமாற்றமாகவே முடியலாம்.

### வேர்டன் நகர்வெற்றியாளர்

முதலாவதுஉலகயுத்தத்தில் வேர்டன்நகரின் வெற்றியாளரெனப் பிரஸ்தாபம்பெற்றவரும், இரண்டாவது உலகயுத்தத்திலே பிரான்சிய விஷிஅரசாங்க தலைவராய் இருந்தவரும், பிரான்சின் 334 மாஷல்களில் கடைசியானவருமான மாஷல் பிலிப் பெத்தேன் அவர்கள் அபகீர்த்தியுடன் தமதுசீவியத்தின் கடைசியான ஆறு வருடங்களையும் கழித்துவந்த டி'ஈ. யூ. எனும் தனிமையான தீவிலே சென்ற புதன்கிழமை அடக்கஞ்செய்யப்பட்டனர். அப்போதைய விஷிஅரசாங்க மந்திரிமார்களும், அதிகாரிகளும், ஜெனறல்களும், மேற்றிராணிமார்களும், அனுதாபிகளுமாய் 3,000 பேரும், அத்தீவுவாசிகள் 2,000 பேரும் அடக்கத்திற்குச் சமுகமளித்திருந்தார்கள். 1940-ம்ஆண்டு பிரான்சிய பிரதமசேனுபதியாயிருந்த ஜெனறல் மாக்ஸிம் வெகான் அவர்களும், ஸ்ரீமதி பெத்தேன் அவர்களுமே பிரதானதுக்ககாரராய் இருந்தார்கள்.

* * *

—புதியஉலகமாகிய அமெரிக்காவிலே கிறிஸ்தோப்பர் கலம்பஸ்அவர்கள் முதன்முதலாகக் கால்வைத்த இடமென்று சரிதாசிரியர்களால் அதிகமாக நம்பப்படுகின்ற சான்சல்வடோர்தீவிலுள்ள றைடிங்றொக்பட்டினத்திலே கலம்பஸின் நைற்சுத்தவீரர்கள் ஓர் கோவில்கட்ட ஆயத்தப்படுகின்றுர்கள். சான்சல்வடோர் கோவிலென்று அழைக்கப்படவிருக்கும் இந்தக்கோவில் 15-ம்நூற்றுண்டின் ஸ்பானிய சிற்பவேலைப்பாடுடையதாய் இருக்கும்.

—கத்தோலிக்கசமயத்துக்கு விரோதமாக மஸ்கோநகரில்அச்சிடப்பட்டனவாய் மூன்றுகோடிக்குமேற்பட்ட பிரசுரங்களை கடந்தசிலவாரங்களிலே கம்யூனிஸ்தர்கள் சோவியற்சார்புடைய இரும்புத்திரைநாடுகளிலுள்ள சனங்கள்மத்தியில் பரப்பிவந்திருப்பதாக வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனதுபேரப்பிள்ளைக்குப் பதின்மூன்று வருடங்களாக அநேகவைத்தியர் சிகிச்சை செய்தும் குணப்படாதநோய் கடைசியாகப் பாத்திமாமாதாவுக்குச் செய்துகொண்ட நேர்த்தியின்பேரில் அதிசயிக்கத்தக்கவிதமாய்க் குணமாகியது. நேர்த்திப்பிரகாரம் இதைப்பிரசுரிக்கிறேன்.

அ. மரியம்மா

போக்குவரத்து

## அறிவித்தல்

### நல்லூர்க் கந்தசுவாமிகோவில் வருடமகோற்சவம்—1951.

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் மகோற்சவம் காரணமாக, கீழே காட்டப்படும் தெருவீதிகள் 1951-ம் ஆண்டு ஆவணி மாதம் 8-ந் தேதி தொடக்கம் புரட்டாசி மாதம் 2-ந் தேதி வரை எவ்வகையான வண்டிகளும் கீழ்க்காட்டப்படும் தெருவீதிகளால் போக்குவரத்துச் செய்யாமல் தடுக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பெருந்தெருவில் ஆனைப்பந்திச்சந்திக்கும் 2-ம் மைல் கல்லுக்குமிடையே உள்ள பாகம்.

(ஆ) பண்டாரக்குளத்து ஒழுங்கைக்கும் பிராமணக்கட்டுக்குள ஒழுங்கைக்கும் இடையேயுள்ளகோயிலின் மேற்குவீதி.

2. சமயோசிதமாக மாற்றப்படும் தெருக்களின் விபரம்.

குறித்தகாலத்திலே வண்டிகள், ரதங்களைச்செலுத்துவோர் கீழேகாட்டப்படும் தெருக்கள்மூலம் செலுத்துவார்களாக.

(அ) யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய்மார்க்கம் போக்குவரவு செய்வோர் நாவலர்தெருவாலும், நல்லூர்க் குறுக்குத்தெருவாலும் வண்டி, ரதங்களைச் செலுத்துக.

(ஆ) அரசடித்தெருமூலம் கோப்பாய்மார்க்கம்செல்லுவோர் "உவைமன்" தெரு, நாவலர்தெரு, நல்லூர்க்குறுக்குத் தெருமார்க்கமாகச் செலுத்திச்செல்லுக.

3. திருவிழாத் தரிசனத்துக்கு வண்டிகள் ரதங்கள் மூலமாகச்செல்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அவ்வண்டிகளையும் ரதங்களையும் கொண்டுபோய் நிரலே ஒதுக்கிவிடுதற்கான தானங்கள் மூன்றிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(அ) அரசடித்தெருமூலமாகக் குறித்த கோவிலுக்குச்செல்லும் வண்டிகள் ரதங்கள் வீரமாகாளி அம்மன்கோவில் நிலத்தில் விடப்படலாம்.

(ஆ) தெற்கிலிருந்து கோயிற்தெருவீதியால்வரும்வண்டிகள் கைலாயபிள்ளையார்கோவில் நிலத்தில் விடலாம்.

(இ) கோப்பாய்மார்க்கமாக வரும் வண்டிகள் ரதங்கள் முத்திரைச்சந்தை நிலத்தில் விடலாம்.

A. C. பர்னுந்தோ,
வடமாகாண பொலிஸ்
தலைவர்.

யாழ்ப்பாணம்
பொலிஸ்தானம்
26-7-51

## CEYLON GOVERNMENT RAILWAY

### Level Crossing Repairs

The Level Crossing at 21 miles 52 chains (Railway mileage) on the Road between Kurana and Negombo Railway Stations will be under repairs and closed for vehicular traffic as follows:-

Tuesday, 7-8-51—Partially closed 10 p. m. to 12-0 Mid-night.
Wednesday, 8-8-51—Totally closed 12-1 a. m. to 3-0 a. m.
Wednesday, 8-8-51—Partially closed 3-0 a. m. to 6-0 a. m.

During the period of Total closure traffic can use Sri Wickrama Rajasinghe Road and Weboda Road.

## GOVERNMENT TENDERS

### Mannar Kachcheri

Notice is hereby given that the sale of Arrack & Foreign Liquor Rents, Mannar District will take place on 24-8-51. Tenders should reach this Kachcheri before 10 a. m. on the date fixed.

For particulars see Part I—Section II, Govt. Gazette, 27-7-51, copies of which are available for perusal at all Post Offices.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 2 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org